சிவாச்சாரியாரின்



# அருள்ஜோதி

(சமய சஞ்சிகை)

ஆசிரியர்
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி
கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ




சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் - 04 வைகாசி - ஆனி ஜோதி - 36

ஆசிரியர் : கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் . ஜே. பி.


## மலர்ந்த புஷ்பங்கள்


1. ஆசியுரை
2. அருளுரை
3. அந்தணர்களுக்குரிய நாற்பது ஸம்ஸ்காரங்கள்
4. சக்தி வழிபாடு
5. வல்லிபுர ஆழ்வார் கும்பாபிஷேகம்
6. மங்களம் தரும் வேதம்
7. ஆலயமும் பிரார்த்தனையும்
8. ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி
9. சக்தியின் நாமங்கள்



**சர்வதேச இந்துமத குருபீடம்**

*(அரச அங்கீகாரம் பெற்ற சமயஸ்தாபனம்)*

**INTERNATIONAL HINDU RELIGIOUS GURUPEEDAM**

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம்

*751 A, Bloemendhal Road*
*Colombo - 15, Sri Lanka*
*T. P. : 072-422239 Fax : 01-527025*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஸ்ரீசந்திர மௌளீஸ்வராய நம
ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

**ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்**
அவர்கள்

ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்
1. சாலைதெரு, காஞ்சிபுரம் - 631502

"இலங்கை இந்துமத குருபீடாதிபதி" சிவாகம ஞானி "சிவாச்சார்ய சிம்மம்" "கலாநிதி" அமரர் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக, சர்வதேச இந்துமத குருபீடம் வெளியிட்டுவரும் **'அருள்ஜோதி'** எனும் ஆன்மீக சஞ்சிகை சமயக்கட்டுரைகள், ஆகம, புராண கட்டுரைகள், வினா - விடை, மாணவர் பகுதி, மங்கையர் பகுதி, செய்திக் கோவை என பல சிறப்பு அம்சங்களுடன் வெளிவருவது அறிந்து சந்தோஷம்

இம்மலரின் ஆசிரியர் "கலாநிதி" ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களின் சமயப் பணியைப் பாராட்டி, ஆன்மீக அன்பர்களுக்கு அருளின்பம் ஊட்டும் மலராக **'அருள்ஜோதி'** மலர ஆசீர்வதிக்கிறோம்.

**நாராயணஸ்மிருதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதிஷ்டா கலாநிதி - பிரதிஷ்டா சிரோமணி

# பிரம்மஸ்ரீ. சாமி. விஸ்வநாதக் குருக்கள்

## - வழங்கிய ஆசிச்செய்தி -

இலங்கைத் திருநாட்டில் தலைசிறந்த சிவாச்சாரியராக வேத - சிவாகம, புராண, இதிகாஸ, ஜோதிட, மாந்திரீக, வைத்தியம் என பலதுறைகளிலும் பாண்டித்யம் பெற்று இலங்கை இந்துமத குருபீடாதிபதியாக, சிவாகம ஞானியாக அந்தண குலத்தவர்க்கு ஏற்படும் சந்தேகங்களை ஆதார பூர்வமாக உடனுக்குடன் தெளிவு பெறவைத்து அமரரான அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக.

அன்னாரின் புதல்வர்களில் ஒருவரான " ஸ்ரீ சபரிமலை சாஸ்தா பீடாதிபதி " ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் **'அருள்ஜோதி'** எனும் ஆன்மீக மலரை வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது.

எமது பிராம்மண சமூகத்திற்கு ஏற்படும் துனபங்கள், சங்கடங்களுக்கு துணிந்து குரல் கொடுக்கக்கூடிய, குரல் கொடுத்து நடவடிக்கை எடுத்துவரும் எங்கள் அன்பு தாஸனான ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்

எமது குருமார்களுக்கு பாதுகாப்பு படையினரால் ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து மேன்மைதங்கிய ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களை சந்திப்பதற்கு பத்துக் குருமார்களுடன் சென்றபோது ஜனாதிபதி அவர்கள் அவசர வேலையாக வெளியே சென்றுள்ளார்கள். எனவே என்னை உங்களுடன் பேசுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளர் கூறியபோது நாம் எமது குருமார்களின் பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி அவர்களுடன்தான் பேச விரும்புகிறோம் என்று துணிந்து கூறியதன் பயனாக அடுத்தவாரமே ஜனாதிபதி அவர்கள் அலரிமாளிகைக்கு பத்து குருமார்களையும் அழைத்து 45 நிமிடங்கள் உரையாடினார். இது எமது பிராம்மண சமூகத்திற்கே கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

இந்த வெற்றிக்குரியவர் உண்மையில் ஐயப்பதாஸக் குருக்கள்தான் என்றால் எவரும் மறுக்க முடியாது.

எமது இலங்கை பிராம்மண சமாஜத்தின் தலைவராக, சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஸ்தாபக தலைவராக, இந்துசமய கலாச்சார முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக, அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் பீடாதிபதியாக பல, சமயப்பணி, சமூகப்பணி, கலைப்பணி ஆற்றிவரும் கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார். J. P. அவர்களின் பணி மென்மேலும் சிறக்க ஆசீர்வதிக்கிறேன்.

அவர்கள் வெளியிடும் **'அருள்ஜோதி'** எனும் ஆன்மீக மலர் ஆஸ்தீகப் பெருமக்களுக்கு பயனுடையதாக அமைய இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**சுபம்**

சுவிசுத்தாராமறோட்
வெள்ளவத்தை, கொழும்பு.
Tel : 585063

**பிரம்மஸ்ரீ. சாமி. விஸ்வநாதக் குருக்கள்**
(நவாலியூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

ஸர்வஸாதகமணி, ஸர்வ சாதக திலகம்

**சிவஸ்ரீ. தே. சு. முத்துக்குமாரசுவாமி சிவாச்சாரியார்**

(தென்னிந்திய அமைப்பாளர், சர்வதேச இந்துமத குருபீடம்)

## அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

புண்ணியபூமியான லங்காபுரியில் ஜாதி மத இன வேறுபாடின்றி எல்லா இனங்களிலும் ஹ்ருதயத்திலும் ஆண்டவன் இருக்கின்றான் என்கிற பெருநோக்குடன் இலங்கை இந்துமத குருபீடாதிபதி, சிவாகமஞானி, "சிவாச்சார்ய சிம்மம்" அருள்ஜோதி **ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்** அவர்களின் ஞாபகார்த்தமாக அருள்ஜோதி என்னும் ஆன்மீக இதழ் ஐயங்களைப் போக்கும் விதத்தில் சபரிமலை சாஸ்தாபீடாதிபதி கலாநிதி **ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார்** நடாத்திவரும் ஆன்மீகமலர் மூலம் விஷயங்களைப் படித்து நல்லுணர்வை பெறுமாறும் மேலும் இங்கு மட்டுமல்லாமல் சமய குரவர்கள் பாடியது போல் "தாய் நாடு முதல் வெளிநாடுகள் உட்பட" **முன்னைபழம் பொருட்கும் முன்னைபழம் பொருளே பின்னைப்புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே** என்கின்ற தேனினும் இனிய திருவாசகத்தின்படி "அருள்ஜோதி" பத்திரிகை எல்லோராலும் படித்து நன்மையை அடைய வேண்டுமென இறைவனை பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

ஸர்வஸாதகமணி

**தே. சு. முத்துக்குமாரஸ்வாமி சிவாச்சாரியார்**

14, கற்பகவிநாயகர் கோவில் தெரு,
கிழக்கு தாம்பரம்
சென்னை - 59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தணர்களுக்குரிய நாற்பது ஸம்ஸ்காரங்கள்

ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J. P.
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

*ஜன்மனோ ப்ராம்மணோ ஜ்ஞேய: ஸம்ஸ்காரை: த்விஜஉச்யதே!*
*விப்ரத்வம் வித்யயா சாபி : ச்ரோத்ரிய உச்யதே!!*

பிறப்பால் பிராமணர், ஸம்ஸ்காரங்களால் "த்விஜன்" எனப்படுகிறார். 'விப்ர' என்பது வித்தையால் உண்டாகிறது. இம்மூன்றும் சேர்ந்தால் 'ச்ரோத்திரியன்' எனப்படுகிறார்.

ப்ராமண, க்ஷத்ரிய, வைஸ்ய என்பவர்கள் 'த்விஜர்' எனப்படுவர். த்வி+ஜன்ம: இரு பிறப்பாளர் என்பது பொருள். இம்மூன்றும் வருணத்தாரும் தாய் தந்தையிடம் உண்டாகும் போது ஒரு பிறப்பையும், கர்ப்பாதானம் முதலான 40 ஸம்ஸ்காரங்களால் இரண்டாவது பிறப்பையும் பெறுகின்றனர். தாய் வயிற்றிலிருந்து பிறந்தபடியே இருக்க இயற்கைஅய இடம் தருவதில்லை. செயற்கையில் சில மாறுதல்களுடன் சேர்ந்தால்தான் இயற்கையும் பரிமளிக்கிறது. 'சேதன' வஸ்துக்களில் மந்திரமில்லை, 'அசேதனமான' ஜட வஸ்த்துக்களிலும் இதைக் காணலாம்.

சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட தங்கமோ, வைரமோ கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்தோ, பவளமோ அப்படியே பயன்படுவதில்லை. அதன் மீதுள்ள அழுக்குகளை, கடசல் பிடித்து மெருகுபடுத்தினால்தான் அது பள பளவென்று பிரகாசிக்கும், கூடவே அழகையும் தரும்.

அதேபோல் மனிதன் பிறக்கும்போது தனக்குக் காரணமாகவிருந்த "பீஜதோஷம்", தான் தங்கியிருந்த "கர்ப்பதோஷம்" முதலியவைகளுடன் பிறக்கிறான்.

தோஷங்களை அகற்றும் உபாயங்கள் பலவகை. சிலவற்றை ஜலத்தினால் நீக்கலாம், சிலவற்றை மண்ணினால் போக்கலாம், இவ்வாறு பல சுத்தி சாதனங்கள் உண்டு.

முன்கூறிய பீஜ, கர்ப்ப தோஷம் நீக்க வேதம் கூறிய கர்மாக்களால்தான் முடியும்.

உடலில் உள்ள அழுக்கை ஜலத்தினால் அகற்றுகிறோம். மனதில் உள்ள மலங்களையும், ஜீவனிடமுள்ள அவித்யா மலத்தையும் போக்குவது எப்படி? காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம் இவைகளே மனத்திலுமுள்ள மலம். மீண்டும் மீண்டும் உடல் எடுத்து மரணிக்கக் காரணமான கர்மவாஸனையே ஜீவனின் மலம். இந்த மலங்களோ இவைகளுக்கு இருப்பிடமான மனமோ, ஜீவனோ நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆனால் அவைகளை அறிகிறோம்.

கண்ணுக்குப் புலப்படாத விஷயங்களை நமக்கு எடுத்துக் காட்டுவது வேதம். அதன் கருத்தை விளக்கிக் காட்ட மஹரிஷிகள் ஸூத்ரம் எழுதினார்கள். அந்த ஸூத்ரத்தில் மனோமலம், ஜீவமலம், அகல நாற்பது ஸம்ஸ்காரங்களையும் ஆத்மகுணங்கள் எட்டையும் மஹரிஷிகள் கூறியுள்ளனர்.

இந்த நாற்பது ஸம்ஸ்காரங்களும் இறைவனை ஆராதிக்கும் பூஜையாகும். ஸ்வர்க்கமோ, வைகுண்டமோ, கைலாஸமோ, ப்ரும்மலோகமோ, முடிவில் முத்திரையோ பெற இவை சிறந்த சாதனங்களாகப் போற்றப்பட்டுள்ளது.

"ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாவை : (ப.கீதை)

தன் கர்மாவினால் பகவானை அர்ச்சிக்கும் மனிதன் ஸித்தி அடைகிறான் என்று கீதையில் பகவான் கிருஷ்ண பரமாத்வா கூறியுள்ளார்.

அந்தண குலத்தில் பிறந்தவர்களுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்களும் அவசியம் செய்யப்பட வேண்டும். மேலும், அந்தணர்களுக்கு உபநயனம் ஆனதும் "ப்ரம்மோபதேஷம்" இடம் பெறும்.

அவரது வலது காதிலே குருவான தந்தை பிரணவ மந்திரத்தோடு கூட "காயத்ரி" மந்திரத்தையும் உபதேசிக்கிறார்.

அன்றுமுதல் ந்யாவந்தனம், சமிதாதானம் போன்றவற்றை அனுஷ்டித்து வேதபாடங்களை சற்குருவிடம் கற்று அன்பு, பணிவு, பொறுமை, பரிவு, தியாக சிந்தை கொண்டவனாகவும், தினம்தினம் அறிந்தும், அறியாமலும் செய்கின்ற பாபங்களை அன்றே விலக்கும் சக்தியைப் பெறுபவன் பிராமணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவிலே செய்த பாவம் காலைச் சந்தியா வந்தனத்தாலும், காலையிலே செய்கின்ற பாவங்கள் மாத்யான்னிக சந்தியாவந்தனத்தாலும், பகலில் செய்கின்ற பாவங்கள் மாலையில் செய்கின்ற சந்தியாவந்தனத்தாலும் அற்றுப் போகிறது என வேதம் குறிப்பிட்டுள்ளது!

# நாற்பது ஸம்ஸ்காரங்கள்

### 1. கர்ப்பாதானம்

ஒரு மரம் நல்ல பழத்தை அளிக்க வேண்டுமானால் நல்ல விதையைத் தெரிவு செய்து நல்ல நிலத்தில் நல்ல காலத்தில் விதைக்க வேண்டும். இதையே 'பருவத்தே பயிர் செய்' என்பர். சாதாரண செடி – கொடிகளுக்கே இந்த நியமம் தேவைப்படுமானால் ஆறறிவு படைத்த ஒரு மனிதனைப் பிறப்பிக்க எவ்வளவு நியமம் வேண்டும்?

நல்ல பிள்ளை உண்டாகி குழந்தையும் பெற்றோரும் நன்மைபெற சில விதிகளைக் கூறுகிறது சாஸ்திரம். முதலாவது ஸம்ஸ்காரமான 'கர்ப்பாதானம்' என்னும் கிரியையை முறைப்படி செய்ய வேண்டும்.

### 2. பும்ஸவனம்

கர்ப்பமுண்டாகி 2, 3 அல்லது 4வது மாதத்தில் பும்ஸவனம் என்ற ஸம்ஸ்காரம் செய்ய வேண்டும். முதற் குழந்தை ஆண் குழந்தையாகத் தந்தை பெயர் சொல்லும் வாரிசாகப் பிறக்க வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுவது பும்ஸவனம் எனும் ஸம்ஸ்காரம்.

6வது அல்லது 8வது மாதத்தில் செய்யப்படுவது ஸீமந்தோன்நயனம் (சீமந்தம் – வளைகாப்பு – பூச்சூட்டல் என அழைப்பர்) பும்ஸவனம் – சீமந்தன் இரண்டுமே பிறக்கும் குழந்தையின் நலம் வேண்டிச் செய்யப்படுவது.

தற்காலத்தில் 2, 3, 4வது மாதத்தில் செய்ய வேண்டிய பும்ஸவனத்தை 8வது மாதத்தில் ஸீமந்தத்தோடு செய்கின்றனர்.

### 3. ஸீமந்தோன்நயனம்

கர்ப்பமுண்டாகி 6வது அல்லது 8வது மாதத்தில் பெண் வீட்டாரினால் கர்ப்பமான பெண்ணுக்குச் செய்யும் மங்களச் சடங்கு ஸீமந்தோன்நயனம்.

கர்ப்பமான பெண்ணை மலர்களால் அலங்காரம் செய்து பன்றிமுள், தெற்பை, அத்திக் கொப்பு இலைகளால் பெண்ணின் தலைமுடியை வகுந்து பிரிக்கும் கிரியை ஸீமந்தோன்நயனம் எனப்படும். (உச்சி வகுந்தெடுத்தல்)

### 4. ஜாதகர்மா

குழந்தை பிறந்தவுடன் செய்யப்படும் 'ஜாதகர்மா' என்பது நல்ல பலனைக் கொடுக்கும். மேலும் ஆண்பிள்ளை பிறந்தவுடன் பிதுர்கடன் அகலும் என்பது சாஸ்த்திரம்.

பேரனோ அல்லது பூட்டனோ இறந்திருந்தால், அந்தக் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தவுடன் அவர்களது ஆத்மா ஓடிவரும் என்பது ஐதீகம்.

எனவே பிதுர்களுக்குச் செய்யும் தானங்கள் முதலியவற்றைத் தந்தையானவன் ஸ்நானம் செய்து முறைப்படி செய்ய வேண்டும்.

### 5. நாமகரணம்

பிறந்த குழந்தைக்கு நல்ல நேரத்தில் அவனது நக்ஷத்திரத்திற்குப் பொருத்தமான பெயரைச் சூட்டுவது நாமகரணம் எனப்படும். தனது தந்தை வழிப் பெயரையோ, அல்லது குல தெய்வத்தின் பெயரையோ முறைப்படி சூட்டி குழந்தையின் வலது காதிலே பதினொருமுறை பெயரைக்கூறி அழைப்பர். இதுவே நாமகரணம் எனப்படும்.

### 6. அன்னப்ராசனம்

குழந்தை பிறந்து ஆறாவது மாதத்தில் செய்ய வேண்டியது. வேதம் ஓதி விதிப்படி குழந்தைக்கு அன்னம் ஊட்டும் கிரியை அன்னப்ராசனம் எனப்படும்.

இதனை சோறு தீத்துதல் – பால் பருக்குதல் என்றும் கூறுவர். தாய் மாமன் மடியில் குழந்தையை வைத்து அன்னப்ராசனம் செய்யும் முறையும் சிலரிடம் உண்டு.

### 7. சௌளம்

சௌளம் என்பது 'குடுமி' வைத்துக் கொள்ளல். தற்காலத்தில் நாகரீகம் காரணமாக சிறுவயதில் குடுமி வைப்பதில்லை. பெரியவனான பின்பே 'குடுமி' வைப்பது வழக்கமாகி விட்டது.

வேத மந்திரங்களைக் கூறி அக்னியில் ஹோமம் செய்து நாந்தீ சிரார்த்தம் செய்து பிதுர்களைப் பூஜித்துச் செய்யும் கர்மா சௌளம் எனப்படும். இந்தக் கர்மாவின்போது உப்பு, புளிப்பு, உறைப்பு இல்லாத ஆகாரத்தை உண்ணக் கொடுப்பர்.

### 8. உபநயனம்

பிராம்மணனாகப் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் அதி முக்கியமான கர்மா உபநயனம். அன்றுமுதல் அவன் இன்னுமொரு பிறப்பு எடுக்கிறான். எனவேதான் இரு பிறப்பாளர் அந்தணர் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினமே அவனுக்கு பிர்மோபதேசம் நடைபெறுகிறது. அதுமுதல் அவனுக்குப் பல கட்டுப் பாடுகள் சந்தியாவந்தனம், சமிதாதானம், காயத்திரி ஜபம் போன்ற நியமங்களை விதிப்படி கடைப்பிடிக்க வேண்டும். 'பவதி பிக்ஷாந்தேஹி' என யாஸகம் செய்து வாழ வேண்டும் என்பது நியதி.

### வேத வ்ரதங்கள் நான்கு

9. ப்ரஜாபத்ய காண்டரிஷிதர்ப்பணம்
10. ஸோமாய காண்ட ரிஷி தர்ப்பணம்
11. அக்னயே காண்ட ரிஷி தர்ப்பணம்
12. வைவஸ்வதேவ காண்ட ரிஷி தர்ப்பணம்.

13. சமாவர்த்தனம்

விவாகத்திற்கு முன் நடாத்தப்படும் கர்மா இது. சந்தியாவந்தனம் செய்து, சமிதாதானம் செய்து பின்னர் நடைபெறும் கர்மா சமாவர்த்தனம்.

மாணவன் விதிப்படி ஹோமம் செய்து ப்ரம்மச்சரிய ஆஸ்ரமத்தில் செய்ய வேண்டிய நியமங்களைச் செய்து முடித்து க்ரஹாஸ்ராஸ்ரமத்திற்குச் செல்லுதல் சமாவர்த்தனம் என்னும் கிரியையோடு நடைபெறும்.

14. விவாகம்

தர்மத்தைக் கடைப்பிடித்து இல்லறத்தை நல்லறமாக நடாத்துவதற்கு கணவனையும் – மனைவியையும் இணைத்துக் கொள்ளும் கர்மா விவாஹம்.

வி+வாஹம் = சிறப்பாக வஹிப்பது உத்வாஹ : உத்+ வாஹ : உன்னதமாக வஹிப்பது என்பது பொருள்.

திருமணம், கல்யாணம், கன்னிகாதானம், பாணிக்கிரகணம் என விவாகம் பேசப்படுகிறது. இல்லறமே நல்லறம்.

### பஞ்ச மஹா யக்ஞங்கள்

15. தேவ யக்ஞம்
16. பித்ரு யக்ஞம்
17. மனுஷ்ய யக்ஞம்
18. பூத யக்ஞம்
19. ப்ரம்ம யக்ஞம்

### ஏழு பாக யக்ஞங்கள்

20. அஷ்டகா பாக யக்ஞம்
21. ஸ்தாலீபாக யக்ஞம்
22. பார்வண பாக யக்ஞம்
23. ஆக்ரஹாயணீ யக்ஞம்
24. ச்ராவணீ பாக யக்ஞம்
25. சைத்ரீய பாக யக்ஞம்
26. ஆச்வயுஜீ பாக யக்ஞம்

### ஏழு ஹவிர் யக்ஞங்கள்

27. அக்னி ஆதானம்
28. அக்னி ஹோத்ரம்
29. தர்சபூர்ணமாஸம்
30. ஆக்ரயணம்
31. சாதுர்மஸ்யம்
32. நிருட பசுபந்தம்
33. ஸௌத்ராமணி

### ஏழு ஸோம யக்ஞங்கள்

34. அக்னிஷ்டோமம்
35. அத்யக்னிஷ்டோமம்
36. உக்த்யம்
37. ஷோடசி
38. வாஜபேயம்
39. அதிராத்ரம்
40. அப்தோர்யாமம்

இவற்றுடன் சமய தீக்ஷை, விஷேட தீக்ஷை, நிர்வாண தீக்ஷை, ஆசார்ய அபிஷேகம் பெற்று ஆகம, வைதிக கிரியைகளைச் செய்யும் அதிகாரம் பெற்றவர்களே சிவாச்சாரியார்கள்.

அந்த வகையில் பல சிறப்புக்கள் பெற்றவர்கள் இன்று 75வது வயதில் பவளவிழாக் கொண்டாடும் பிரதிஷ்டா சிரோமணி பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள் ஐயா அவர்கள்.

இலங்கைத் திருநாட்டின் தலைசிறந்த சிவாச்சாரியாரும் உலக நாடுகள் பலவற்றிலும் ஆன்மீகப் பணிபுரிந்தவரும் "சர்வதேச இந்தமத குருபீட வித்வத் சபைத் தலைவருமான பிரதிஷ்டா சிரோமணி – சிவாச்சார்ய சக்கரவர்த்தி" நவாலியூர் சாமி. விஸ்வநாதக் குருக்கள் ஐயா அவர்கள் சரித்திரம் படைத்த சாதனையாளர், ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆலயங்களில் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், மஹோற்சவம் என இலங்கையில் மட்டுமல்ல சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், கனடா, லண்டன், அவுஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளிலும் சிறப்புற நடாத்தி வைத்து உலகெங்கும் வாழுகின்ற இந்துப் பெருமக்கள் மனதில் தனக்கெனத் தனியான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர் நவாலி மாமா,

அவர்களின் வெற்றிக்குக் காரணமாகவிருப்பவர் அவரது தர்மபத்தினி அம்மையார் அவர்கள். அவர்களின் ஆன்மீகப் பணி எமது சமூகத்திற்கு இன்னும் பல ஆண்டுகள் தேவை எனக் கூறி எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

*சுபம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சக்தி வழிபாடு பற்றிய சில வரலாற்றுச் சிந்தனைகள்"

ஆய்வாளர் : *வாகீச கலாநிதி கனகசபாபதி* நாகேஸ்வரன் எம். ஏ.
*சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,*
*சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா.*

தாய்த்தெய்வ வழிபாடாகிய சக்தி வழிபாடு உலகிலேயே மிகவும் தொன்மையான பெருமைமிகு வழிபாடாகும். வழிபாடு, வணக்கமுறை, அநுபூதி, துதி, அர்ப்பணிப்பு, பூசை, விரதம், கோயில் நடைமுறை, விக்கிரக ஆராதனை, அன்னதானம், வித்தியாதானம், அறச்சாலை, கல்வி, விழாக்கள், நேர்த்திகள், பொங்கல், குளிர்த்தி, மடை, அபிஷேகம், கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், ஆலயப் புனருத்தாரணம், அன்னப்பிராசனம், கர்ணவேதனம், முடியிறக்கல், திருமணம், மகப்பேறு, ருதுசாந்தி, அந்தியேஷ்டி, ஆண்டுத்திவசம், துடக்குக் கழித்தல், தோஷ நிவர்த்தி, சங்கிராந்தி, சஷ்டியப்த பூர்த்தி, மணிவிழா, மரணக்கிரியைகள், கொள்ளி வைத்தல், சாம்பல் அள்ளுதல், பிதிரர் வழிபாடு, தானதருமம் ஆகிய இவையெல்லாம் ஆண், பெண் என்னும் பிறபிலமைந்த மனித வர்க்கத்தவர்களுக்கன்றே பெரிதும் விதி முறைகளுடன் வகுத்தமைத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலான சைவாலயக் கிரியை முறைகளுள் மிகவும் நெருங்கிய தொடர்புடையன. "வேதக்காரர்" என்னும் சொல்லின் பொருள் "சைவக்காரர்" என்பதேயாகும். பொதுவாக "இந்து சமயத்தினைச் சார்ந்தோரனைவருமே "வேத வாக்கை" ஆதாரமாகக் கொண்டொழுகுவோராவர். வைதிக சமயம் என்பது வேதப் பிராமணத்தை அடிப்படை ஆதாரமாகக் கொண்டமைவது. வேதங்களை அடிப்படை ஆதாரமாகக் கொள்ளாத சமயங்களும் உள்ளன. அவற்றினை "அவைதிக சமயங்கள்" என்று அழைப்பர். சைவம், சாக்தம், வைணவம், கணாபத்யம், கௌமாரம், சௌரம் என்பன வைதிக சமயங்களாகும். சமணம், பௌத்தம், லோகாயுதம் என்பனவாகும். இக்கட்டுரையிலே சக்தியின் சமயமெனப் பேசப்படும் "சாக்தம்" குறித்த செய்திகளும், தமிழகத்திலும் ஈழத்திலும் துலக்கம் பெறும் சக்தித் தலங்கள் பற்றிய விபரங்களும் அடங்கும். குறிப்பாகக் "காளி" அம்மன் பற்றிய தகவல்களைக் கொண்டமைவதாகவும் இவ்வாக்கம் இலங்கும்.

"தேவி வழிபாட்டின் அடிப்படைத்தத்துவம் எத்தகைய புரட்சிகளாலும் விஞ்ஞானப் புதுமைகளாலும் அசைக்க முடியாதது" என்று மிகப் பொருத்தமுறக் குறிப்பிட்டு எழுதியுள்ளனர் அரவிந்தரும், சுவாமி விவேகானந்தரும். இவர்களின் இக்கூற்றினை விரித்துப் பார்க்கின் மிகவும் ஆழமான பேருண்மைகள் புலப்படும்.

தாயின் சக்திக்கு உள்ளுறை உயிர், கருணை. உலகத் தாயாகிய சக்திக்கு உள்ளுறை உயிர் தனிப் பெருங்கருணை. உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் "பக்தன்" குழந்தை உள்ளம் உடையவனாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன. பேரரு ளாளர்களும் ஆன்மஞானிகளும் ஆண்மையைக் காட்டிலும் பெண்மைத்தன்மை பூண்டொழுகுவர். வினோபாஜி "ஆன்ம ஞானத்தின் அம்சமே பெண்கள்" என்று குறிப்பிடுகிறார். தாய் சொல்லித்தான் குழந்தை தந்தையை உலகத்தை அறிகிறது. "தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி ஏயுமதே நிட்டை" என்பது சைவசித்தாந்த தத்துவமாகும். சிவன் – உமை; பிரமன் – வாணி; மகாவிஷ்ணு – மகாலட்சுமி; உருத்திரன் – ரௌத்திரி; மகேஸ்வரன் – மகேஸ்வரி; சதாசிவன் – மனோன்மணி; ராதை – கிருஷ்ணா; சீதா – ராமா; பத்திரகாளி – வீரபத்திரர்; இந்திரன் – இந்திராணி; பார்வதி – பரமேஸ்வரன் என்று வருவன காண்க.

இந்திரபோகத்தை அருள்பவள் இந்திராணி; வீரத்தைத் தந்து பகைவர்களை அழிப்பவள் வாராகி; இம்மை மறுமைப் பயன்களைத் தருபவள் மாகேஸ்வரி; காப்பவள் வைஷ்ணவி; ஒடுக்குபவள் – காளி; வீரத்தோடு ஞானத்தை அருள்பவள் – கௌமாரி; கல்வியைத் தருபவள் – பிராமி தமிழ் செழித்து வாழ்ந்த வளம்பெற்ற ஊரான மதுரை மாநகரைக் காவல்புரிந்து வந்த தெய்வம் அர்த்த நாரீச்சுர வடிவமுடைய பெண் தெய்வமாகிய "மதுராபதி" என்கிறது சிலப்பதிகாரம். தமிழகத்தின் தெற்கெல்லையிலே கடல்கோள்கள் ஏற்பட்டு ஆபத்தைப் போக்குவதற்குக் கன்னியா பகவதி என்றழைக்கப்படும் "கன்னியா குமரி" பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் "உதிரப்பலி" வழிபாட்டை ஏற்றுக் கொண்ட பல பிரசித்தி பெற்ற தாய்த் தெய்வங்கள் இன்று பலியேற்காது "படையலேற்று அருள் செய்வனவாக" விளங்குகின்றன. வீரத்தின் விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமும் "பெண்மை"தான் பூனையும் பருந்தும் நெருங்காதவாறு கோழிக்குஞ்சுகளை அரவணைத்துக் காக்கிறது. அதைப்போலவே "குழந்தையை" அம்மை அரவணைத்துக் காக்கின்றாள். காக்கும் கடவுள் வடிவங்கள் பெருமளவில் பெண் வடிவங்களே என்னுஞ் செய்தி ஆராய்ந்துணரத்தக்கது. தமிழ்ச்சிற்பியின் கைவண்ணம் சக்தியின் பல்வேறு திருவுருவங்களையும் காட்சிப்படுத்தியுள்ளது. போருக்குச் செல்லும் மறவர்கள் கையில் பாசம், அங்குசம், உலக்கை (முசலம்), வில், அம்பு, சூலம், கட்டாரி முதலியவைகளைத் தாங்கிக் கொண்டு நிற்கும் காவற்றெய்வமான காளியைப் போருக்குச் செல்லும்போது வழிபடுபவர். "செங்கயல் நெடுங்கண்" அங்கையற் கன்னியின் மங்கல அழகைப் பார்க்க பத்தாயிரம் கண்கள் வேண்டும். மதுரை மீனாட்சியின் மாணிக்கமூக்குத்தின் சுடர் ஒளியிற்தான் மதுரை மக்களின் வாழ்வும் வளமும் அடங்கிக் கிடக்கின்றன. பாண்டிய மன்னர்கள் பார்புகழ ஆண்டது அவளது அருளினால்தான். அத்தனை பெருமைகளுக்கும் புகழுக்கும் காரணியாகவே மதுரை மீனாட்சி மிளிருகின்றாள். மதுரை இன்றும் பழமை மாறாத புதுமையைப் பெற்றிருக்கின்றது. இந்த வரலாறு சக்தியின் தனிப் பெருங்கருணையை விளங்கிக் கொள்ள அவசியமாகும்.

மென்மையான அன்பை பயங்கரமான பேராற்றலாக மாற்றிக் கொள்ளும் சக்தி படைத்தவள் தாய். தாயே சக்தி; உலக அம்மை. அவளை மாகாளியம்மன், பத்ரகாளியம்மன், அங்காளம்மன், காமாட்சி அம்மன், முத்துமாரியம்மன், கருணைவல்லி, மெய்ஞ்ஞானவல்லி, ஆனந்தவல்லி, கற்பகவல்லி, அபிராமி, பகவதி, கருமாரி, தனலெட்சுமி, தான்யலெட்சுமி, தைர்யலெட்சுமி, வீரலெட்சுமி, வித்யாலெட்சுமி, கீர்த்திலெட்சுமி, விஜயலெட்சுமி, ராஜ்யலெட்சுமி சந்தான லெட்சுமி, ராஜராஜேஸ்வரி, மகமாயி, சிவசங்கரி, சண்டி, சாமுண்டி எனப் பல பெயர்கள் கொண்டு அடியவர் அழைப்பர். துன்பத்தையும் இன்பமாகக் கொண்டு அழகிலும் சோகத்திலும் பயங்கரத்திலும் கூட ஒருங்கே உண்மை காணவல்ல சித்த சக்தியும் அன்பு நலமும், நோவையும் சாவையும் வென்றொழிக்கும் நெஞ்சுத் துணிச்சலும் இடையூற்றுக்கு இடையூறாக நின்று ஊழையும் முதுகுகாணும் வெற்றிப் பெருமிதப் புன்னகையும் எல்லாம் "சக்தி அருள்" வரப்பிரசாதமே என்பதனை நாம் நன்கு உணர வேண்டும். "ஞாலமுற்றும் பராசக்தி தோற்றம்" என்பான் மகாகவி பாரதி.

*"காட்டு வழிதனிலே அன்னே*
*கள்வர் பயமிருந்தால் – எங்கள்*
*வீட்டுக்குலதெய்வம் – தம்பி*
*வீரம்மை காக்குமடா!*
*நிறுத்து வண்டியென்றே கள்வர்*
*நெருங்கிக் கேட்கையிலே – எங்கள்*
*கருத்த மாரியின் பேர்சொன்னால்*
*காலனும் அஞ்சுமடா"*

என்று நெஞ்சுரத்தைப் பாடுகின்றான் பாரதி. பாசம், பரிவு, கனிவு, கருணை, கடமையுணர்வு, அன்பு, காதல், அருள், தியாகம், தூய்மை, இரக்கம், அரவணைப்பு, மன்னிப்பு ஆகிய அனைத்து நற்குணங்களுக்கும் உறைவிடமாயிருப்பவள் அம்பிகை. கவிஞர்களையும், அறிஞர்களையும், அருளாளர்களையும், தியாகிகளையும், வீரர்களையும், வித்துவான்களையும் மற்றும் அனைவரையும் உலகிற்குத் தந்தவள் தாய்த் தெய்வமேயாம். இராமகிருஷ்ண பரமஹம்சர், 'சக்தி' என்ற காளியை நான் அழைக்கும்போது காளிவேறு; பிரம்மம் வேறு என்று நினைப்பதில்லை என்கிறார். இந்த வரலாற்றிலே தமிழ் மக்களுக்குள்ள இடத்தைப் பற்றியும் தொண்டுகளைப் பற்றியும் சைவ வரலாற்றறிஞர்கள் இதுவரை அமைவுற ஆராயவில்லை. தமிழ் மக்கள் தமக்கே உரிய பல உயரிய பண்பினையும் உடையராயிருந்தனர். இவற்றினை இன்றும் முன்னின்று, முந்திக் கொண்டும் முனைந்தும் ஆராய்ந்து நூலுருச் செய்து வெளியுலகுக்குக் கொண்டு வந்துதவி செய்பவர்கள் வேற்று மதத்தினரான கிறிஸ்துவர்களே. இப்பேரறிஞர்கள் பாராட்டப்படத்தக்கவர்களே. எனினும் 'தற்சார்பு' மதக் கொள்கையெனும் சுயசார்பு நிலையில் அவர்களது அணுகுமுறை சென்றிருப்பதனையும் மனங்கொள்வது அவசியமாகின்றது. நடுநிலை பேணும் நிலைமையே எல்லோராலுமே ஒப்ப ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். இங்கே வலியுறுத்த விளைவது யாதெனில் எத்தகு 'சார்பு நிலையும்' வலிந்து பேணப்பட வேண்டியதில்லை என்பதே.

வீரமும் வெற்றியும் அருள்பவள் கொற்றவை. வீரக் கட்டிலிலேதான் கொற்றவை வீற்றிருப்பாளாம். கொற்றவையை முருகனின் தாய் என்கிறார்கள். வெறியாட்டுடன் வழிபாடு நடைபெற்றது. போருக்குத் தலைவனைச் செல்லவிடுத்த தலைவியின் தோழிமார் அவன் வெற்றியுடன் மீள வேண்டுமென்று கொற்றவைத் தெய்வத்தை வணங்குவதாகக் கொண்டு நெடுநல்வாடை தெரிவிக்கிறது. சேரர்கள் கயிலைமலையிலுள்ள கொற்றவையை வணங்குவதாகவும் இந்நூல் மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. தஞ்சை மாவட்டத்திலே கும்ப கோணத்திற்குத் தெற்கே உடையாளூரில் இரண்டு 'பிடாரி' கோயில்கள் உள்ளன. அவையாவன: 1. செல்லமாகாளி 2. பாற்குளத்தி அம்மன். இந்தியத் தென்கோடித் தமிழ் மக்கள் எல்லைப் பாதுகாவல் தெய்வமாக இசக்கி, முப்பிடாரி, முத்தாரம்மன், மாரியம்மன், பத்திரகாளி என்னுந் தெய்வங்களைக் கொண்டுள்ளனர். இன்றும் தாய்லாந்திலே மாரியம்மன் வழிபாடு இன, மத பேதமின்றி பௌத்தர், இந்து, கிறிஸ்தவர், முஸ்லிம்கள் அனைவரும் அலங்கரித்து ஊர்வலமாக எடுத்துச் சென்று ஒற்றுமைக்கும் தோழமைக்கும் சகோதர உணர்ச்சிக்கும் எடுத்துக் காட்டாக வளர்ந்து வந்துள்ளது.

புகழ்பெற்ற கன்னியாகுமரிக் கோயில் முதலாம் இராசராசன் காலத்திருப்பணி என்கின்றனர். கி. பி. 984இல் அவன் இக்கோவிலைக் கட்டினான். சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் பிற்காலப் பாண்டியரும் அவர்களுக்குப் பின் விஜயநகரப் பேரரசின் வழிவந்த நாயக்க மன்னரும், அவ்வப்போது குமரித்தாயின் கோயிலில் திருப்பணி செய்து வந்துள்ளனர். திருவாங்கூர் மன்னர்களின் பாதுகாப்பிலும் கன்னியாகுமரி இருந்திருக்கிறது. சுவர்களில் தமிழ், தெலுங்குக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கொற்றவை (காளி) மறக்கருணைத் தெய்வமாகவே கலிங்கத்துப் பரணியில் பாடப்பட்டுள்ளார். வீரர்கள் காளிதேவிக்குப் பலியாகத் தங்கள் கழுத்தை அறுத்து வைப்பதாகவும் கூறப்படுகிறது. பவளம் போன்ற இதழ்களும், முத்துப்போன்ற முறுவல் பூக்கும் பற்களும் அழகிய முகவெட்டும் பெற்றவள் 'தேவி? என்கிறார். கலிங்கத்துப் பரனி ஆசிரியர் செயங்கொண்டார் தேவியின் முகத்தில் இலங்கும் குங்குமப் பொட்டு உதயசூரியன் செந்நிற ஒளியை நினைவூட்டுகிறது.

சக்தி என்ற அம்மனுக்கு விளையாட்டும் வினைதான். வினையும் விளையாட்டுத்தான். அநாயசமாகவும், ஆனந்தமாகவும் அவள் விளையாடுகிறாள். எங்கேயென்றால் காலமாம் வனத்தில் அண்டக்கோலமாம் கற்பக தருவிலே........! வெற்றி மடந்தைக்குத் தமிழிலே கொற்றவை காளி என்று பெயர். இன்று சர்வதேசப் புகழ்பெற்ற பெருவிழாவாகத் திகழும் "நவராத்திரி" என்பது சக்தியில் வேரூன்றி வளர்வதே சௌந்தர்யம்" என்னும் உட்பொருளை உடையது.

தாயுமான சுவாமிகள் சைவத்திற்கும் சக்தி மதத்திற்கும் இடையே ஒரு சமரசப் பாதையை வகுத்துக் கொடுத்தார். பராசக்தியின் வழிபாடு தமிழகத்தில் பாரதி வாயிலாகத்தான் புத்துயிர் பெற்றது. காளி வழிபாடு வங்காளத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரினால் புத்துயிர்ப்பும், புதுமெருகும் பெற்றது. காளித்தேவியோடு கதைத்துறவாடியவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்.

தேவி வடிவங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற உக்கிர வடிவம் காளி. மிகமிக உக்கிரமான வடிவம் காளி. இக்காளி உருவத்தை ஆவுடையார் கோயிலிலே காணலாம். கோவை மாவட்டத்திலுள்ள பேரூர்க் கோவிலிலும் காணலாம். சமயபுரம் மாரியம்மன், கரூர் மாரியம்மனும், பெரிய பாளையம், படவேட்டு அம்மனும் உக்கிரமான காளி வடிவங்கள்தான். திருவேற்காடு கருமாரியம்மனும் உக்கிரமான உருவமுடையவள்தான். திருவெண்காட்டில் அகோர வீரபத்திரரோடு உக்கிரத் தன்மையில் போட்டிபோடுவதுபோல் எதிரே தோற்றம் அளிக்கிறாள் காளி. மயிலாடுதுறைக்கருகில் உள்ள நளினப்பள்ளி என்ற ஊர்க் கோயிலில் காளி ஓர் அதிசயமான கலைப் படைப்பாகும். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த "திருநாகேஸ்வரத்தில்" பச்சைக்காளி, பவளக்காளி இருவருக்கும் கோயில் இருக்கிறது. பழைய பாறையிலுள்ள துர்க்கையும், பட்டீஸ்வரத்திலுள்ள விஷ்ணு துர்க்கையும் குறிப்பிடத் தக்க காளியுருவங்கள். திருவாரூருக்கு அருகிலுள்ள மாவூரில் ஒரு காளிகோயில் இருக்கிறது. பல கைகளுடன் கூடிய கொற்றவைக் காளியாகிய துர்க்கையை மயிலாடுதுறைக்கு அருகில் இருக்கும் தருமபுரத்தில் காணலாம்.

'காளி' என்றாலே கல்கத்தாவின் நினைவுதான் கற்றவர்களுக்கும், பக்தர்களுக்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது அன்பர்களுக்கும், சுவாமி விவேகானந்தரது அன்பர்கள் அபிமானிகளுக்கும் அன்னை சாரதாதேவியினுடைய பக்தைகளுக்கும் வருவதுண்டு. வங்காளமும் காளி வழிபாடும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. தன் சிவந்த நாக்கு வெளியே தொங்கத் தலைவிரி கோலமாய் இருப்பவள் வங்கத்துக் காளி. மைசூரிலுள்ள சாமுண்டிதேவி மகிஷாசுரனைக் கொன்றவள். மைசூர் என்றால் மகிஷாசுரன் கூர் அதாவது எருமை ஊர் என்று பொருள். மைசூர் அரசவம்சத்தின் குலதெய்வமும் சாமுண்டிதான். குஜராத்தில் பராகத் என்ற இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரகாளி, பாலா என்ற இடத்தில் கன்னிப்பெண் தெய்வம், அரசூர் என்ற தலத்தில் சாந்தமான கோலத்திலும் தேவி வீற்றிருக்கின்றாள். இக் கருத்துக்களைச் சக்தி வழிபாடு (1998) நூலில் பகீரதன் குறிப்பிட்டுள்ளார்.

பாலைவனத்தின் அதிதேவதை காளிதான். கி. பி. முதலாவது நூற்றாண்டின் பிற்பாதியில் தமிழ் நாட்டில் தேவி வழிபாடு இருந்ததாகச் சில பழைய கிரேக்க நூல்களும் கிரேக்கப் பிரயாண வரலாறுகளும் தெரிவிக்கின்றன. அதற்கு முன்பே இந்திய மண்ணில் தேவி வழிபாடு வேரூன்றி விட்டது. மகாபாரதத்து விராடபர்வதத்தில் துர்க்கை விந்திய மலையில் நித்தியவாசம் செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. போரில் வெற்றிக்காக அர்ச்சுனன் தேவியை வழிபட்டான் என்று 'மகாபாரதம்' தெரிவிக்கிறது. மகாபாரதம் இதிகாசங்களி லொன்று.

சக்தி வழிபாடு சங்கரரால் சீர்திருத்திய நிலையில் நிலவியதும், தமிழகத்தில் 9ஆம் நூற்றாண்டிலும், 11ஆம் நூற்றாண்டிலும் அதற்குப்பின் நூற்றாண்டுகளிலும் சக்தி வழிபாடு பற்றிய உபநிடதங்கள் பல தோன்றின. பதினெட்டாம் நூற்றாண்டில் வங்கநாடு சக்தி வழிபாட்டின் ஒரு பெரிய வளர்ப்புப் பண்ணையாகத் திகழ்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சக்தி வழிபாடு பாரத நாட்டில் ஒரு புதிய யுகம் கண்டது. இருபதாம் நூற்றாண்டில் சக்தி வழிபாட்டைத் தூய நன்னிலையில் வளர்த்தவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

ஈழத்திலே இலங்கும் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் திருக்கோணேஸ்வரம் மிக்க மகிமை பொருந்திய வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது. சோழர்கள், பல்லவர்கள், பாண்டியவர்கள், யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் போன்ற அனைவரினதும் ஆதரவினைப் பெற்று வளர்ந்தது. கோணேஸ்வரம் சோழ இளவரசனான குளககோட்டன் கோயிலைப் புனரமைத்ததுடன் 'பாபநாசம்' என்னும் தீர்த்தத்தையுங் கட்டுவித்தான். கோணமாமலைக் கோட்டை வாயிலில் விளங்கும் கற்சாசனம் இதனை உறுதிப்படுத்துகின்றது. மன்னர்கள் நன்கொடைகள் வழங்கினர். முதலாம் கஜபாகு, ஜெயவீர சிங்கையாரின், ஐந்தாம் பரராஜசேகரன் ஆகியோர் குறிப்பிடத்தவர்கள். அந்நியர் ஆட்சிக் காலத்தில் ஆலயம் அழிக்கப்பட்டபோது, சில தெய்வ விக்கிரகங்களைக் காப்பாற்றித் தம்பலகாமத்திற்கு எடுத்துச் சென்று அங்கே கோணேஸ்வரருக்குக் கோயில் கட்டினான். இரண்டாம் இராஜசிங்கன் "ஆழியுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்னு திருக்கோணமலை" எனக் கோணேஸ்வரத்தைச் சிறப்பித்துப் பாடுகிறது பெரியபுராணம். குறிஞ்சியும் நெய்தலும் ஒன்று சேர்கின்ற ஓர் இடத்தில் திருக்கோணேஸ்வரமும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும் அமைந்துள்ளன. திருக்குணமலை, திருக்குணாமலை, திருமலை, தென்கைலாயம், கோகர்ணம், திரிகூடம், மச்சேஸ்வரம் என்பன திருகோணமலையின் பிறபெயர்கள். அருணகிரிநாதப் பெருமான் பாடியருளிய திருப்புகழில்,

*"நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்*
*திருக் கொணாமலை தலத்தாறு கோபுர"* என்று

இத்தலத்தை வர்ணித்துள்ளார். மகாவலிகங்கை கடலுடன் சங்கமமாகும் இடம் திருக்கோணமலை. சுவாமி மலை என்று வழங்குகின்ற உயர்ந்த குன்றம் ஒன்று கொட்டியார விரிகுடாவை நோக்கியவாறு அமைந்துள்ளது. அதன் உச்சியிலே திருக்கோணேச்சரக் கோயில் உள்ளது. சமுத்திரத்தின் அடியிலுள்ள கோயில் பற்றி 1961 ஆம் ஆண்டு ஆழ்கடல் ஆராய்ச்சி செய்த மைக்வில்சன் கூறியுள்ளார்.

இராவணன் தென்னிலங்கையை ஆட்சிசெய்த காலத்திலே தட்ஷிண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணேச்சரத்தைப் பூசித்து வந்தான் என்று மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது. இராவணன் தன் தாயாருக்குச் சிவலிங்கம் ஒன்று பெறவிரும்பிப் பெயர்த்த மலை தட்சிண கைலாயமாகிய கோணமாமலை என்று தட்சிணகைலாய புராணங் கூறுகின்றது. இதற்குச் சான்று பகர்வது போல் இம்மலைப் பிளவு ஒன்று இன்னமும் இருக்கின்றது.

போர்த்துக்கேயப் படை கொன்ஸ்ரன்தைன் டீசா செய்த சிவத் துரோகத்துக்காக 1630 ஆம் ஆண்டு வேறு சிலர் செய்த சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொல்லப்பட்டான். 1944ஆம் ஆண்டு திருக்கோணமலைக் கோட்டையினுள் நீர்த்தேக்கம் ஒன்று அமைப்பதற்கு அகழ்வு வேலை செய்த பொழுது விஷ்ணு, மகாலட்சுமி விக்கிரகங்கள் கிடைத்தன. அனைத்து விக்கிரகங்களும் 1952ஆம் ஆண்டிற் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

கோணேசர் கல்வெட்டு இக்கோயிலின் சரித்திரத்தை உரைநடையிலுங் கவிதையிலுங் கூறுகின்றது. சீர்பாத குலவரலாறு, மட்டக்களப்பு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜாவலிய, மச்சபுராணம் திருக்கோணாசல புராணம், இலங்கைச் சரித்திரம், கைலாசபுராணம், திருக் கோணமலைத் திருவுருவங்கள் குடுமியாமலைச் சாசனம், திருக்கோணமலைக் கோட்டை வாயிற் கல்வெட்டு முதலியன இக்கோயில் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றன.

மாதுமையாள் கோணேஸ்வரப் பெருமானுடைய சக்தியென மலைக்கோட்டை ஆலயத்திலே மிளிர அவ்விருவரையும் நோக்கியவாறு அமைந்துள்ள தெய்வீக ஆலயமே ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானமாகும். மிகுந்த தெய்வீக அருள் நலங்கொண்ட 'காளி' அம்மன் இவ்வாலயத்திலிருந்து அருளாட்சி புரிந்த வண்ணமுள்ளனர். தம்மை வந்தடைந்து தசமென நின்றோர்க்குத் தண்ணளியான திருவருட் சிறப்பினால் மேன்மைமிக்க பேறுகளை அருள்பவள் திருமலை பத்திரகாளித்தாய், மகப் பேறு, நோய் நீக்கம், திருமணப்பேறு, விரும்பியதையடையும் பாக்கியம், எதிர்கால வாழ்வில் நிகழவிருக்கும் நன்மை தீமை என்னும் இவற்றையெல்லாம் நம்பிக்கையுடன் வழிபடும் அடியார்களுக்கு நல்குபவள் ஸ்ரீ பத்திரகாளி அம்மன். மனிதருள்ளே மறைந்து உறைந்து கிடக்கும் ஆன்மீகப் போரொளியை சீண்டி உயிர்ப்பித்துத் தனது ஆகர்ஷிப்பினால் அனைத்து உயிர்களுக்கும் ஆன்மீகப் பலத்தைத் துலக்கி காட்டுபவள் திருமலைப் பத்திரகாளி கோயிலின் எழில் வனப்புத்தான் மக்களின் வாழ்வியற் சிறப்பு என்பது மரபார்ந்த சமய நம்பிக்கை. அழகொளிர் மிளிரும் வனப்புமிகு ஆலயத் தோற்றத்தைத் தருவது ராஜ கோபுரங்களும் விமானங்களுமாம். தரும சிந்தையும், சைவப் பற்றுதியும், கலை வளர்ச்சிதரும் விருப்பார்வமும் கொண்டு வாழும் திருக்கோணமலை வாழ் பெருமக்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர்கள், தர்மகர்த்தா சிவஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் மற்றும் தொண்டர் சபையினர், அறப்பணி மன்றங்கள், கலாசார சபைகள் மற்றும் அனைவரும் நமது பெரும் பாராட்டிற்கும் வாழ்த்துக்குக்குரியராகின்றனர்.

மாகாளி, மகாலக்ஷ்மி, மகாசரஸ்வதி என்ற திருப்பெயர்களில் நவராத்திரி காலத்தில் பூசிக்கிறோம். அஞ்ஞானத்தின் பல வடிவான அரக்கர்களை அழித்தவள் துர்க்கையெனும் காளி. துர்க்கையே மது, கைடபவத்துக்குக் காரணமாயிருந்தவள். சும்ப நிசும்பரைச் சங்கரித்தவள். சண்டிஹோமம் செய்து துர்க்கைக்கு உத்தமமான புத்திச் செருக்கால் எதனையும் அறிய முடியும் என்று நினைப்பவன் மனிதன். ஆனால் "சக்தியோ" "யாதேஸச ஸர்வபூதேஸச புத்தி ரூபேன சமஸ்திதா" என்கிறது ஸ்லோகம். சக்தியே அம்பிகையே புத்தி ரூபமாக விளங்குகிறாள். மோகத்தில் சூழ்ந்துள்ள அஞ்ஞானியருக்கும் அவள் ஞானம் அருள்வதையும் சமஸ்ர காரணியான அவளே ஸம்ஸார பந்தம் நீக்கி மோட்ஷம் அளிப்பதையும் தானே காணுகிறோம். இத்தகு பெருமைகளனைத்தும் பொருந்தியவளே திருக் கோணமலை பத்திரகாளி. 'வைராக்கியம்' என்பது ஆன்மசம்பத்து. இதனைத் தருபவள் திருமலை பத்திரகாளி. 'பத்திரகாளி' என்னும் இவள் நவராத்திரி அஷ்டமியில் அவதரித்தாள் என்றும் தேவிபாகவதம் கூறும் அம்பாள் சத்தியம், ஞானம், ஆனந்தம் என்ற மூன்றையுமே காழச் செய்கிறாள்.

கோயில்களிலே ஏன் 'கண்டாமணி' இழுத்தடிக்கிறார்கள்? இவ்வினாவுக்குரிய விடையே 'யுத்தத்தோடு' சம்பந்தப்பட்டது. எத்தனையோ புதிய புதிய நவீன யுத்த ஆயுதங்களும், உத்திகளும், திட்டங்களும் நடைமுறைப்படுத்தியே எந்த யுத்தமும் உலகிலே நிகழும். கண்ணகி கோபாவேஷங் கொண்டு தனது முலையைத் திருகி மதுரையை எரித்தபோதும் கூட, 'பசு பத்தினி பார்ப்பார் பெண்டிர்' இவர்களை விடுவித்துத் தீத்திறத்தோர் பக்கமே அழிக்க என்று தானே உத்தரவிட்டாள். அதுபோலவே மகிஷாசுர மர்த்தினியும், காளியும், துர்க்கையும் கூட சிலர்மீது ஆயுதப் பிரயோகத்தை நிகழ்த்தக்கூடாதென்று எண்ணியே 'கண்டாமணியைக் கணகணவென' முழக்கினாள். அந்த நாதத்திலேயே நாடி அதிர்ந்து விழுவான் எதிரி. துர்க்கை என்றால் 'துர்க்கம்' எனும் 'கடத்தற்கரிய துக்கத்தைத் தாண்டிக் கரையேற்றுவிப்பவள்' என்று பொருள். அம்பாளின் அஷ்ட குணங்கள் : 1. தயை, 2. மன்னித்துத் தாங்குவது, 3. அசூயையின்மை, 4. தூய்மை, 5. பிரயாசையின்றிச் செயலாற்றுந் திறன், 6. சுயசிந்தனை, 7. அற்பத்தனமின்மை, 8. பற்றின்மை என்பனவாகும். சத், சித் ஆனந்தத்தை அனுபவிப்பதற்கு அத்தியாவசியமா அதற்கு எதிரிடையான சத்துருக்களை அழித்தேயாக வேண்டியிருக்கிறது. இந்த அழிவு இன்றி அந்த அனுக்கிரகம் இல்லை. அழிவின் வேராகிய கோப உணர்ச்சியே காளி. தனிப்பட்ட அது பயங்கரமாக இருக்கும். ஆனாலும் அது அதர்மத்துக்கே பயமூட்டுவது. நம்மீது படையெடுத்துள்ள உட்பகைகளை காளியின் துணைகொண்டு நாம் அழித்தாலன்றி பேரின்பமில்லை. ஸப்தமாதாக்கள் என்போர், 1. பிரம்மாணி, 2. மகேஸ்வரி, 3. கௌமாரி, 4. வைஷ்ணவி, 5. வராஹி, 6. நரஷிம்ஹி, 7. ஐந்தரீ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரக்ததந்திகா' பயமனைத்தையும் போக்கும் உருவின் பெயர் பயத்துக்கான காரணம் தோன்றும் போதெல்லாம் பயத்தையும், பயமுறுத்தும் இவளது நினைவு வந்து ரட்சிக்கும். 'ரக்தசாமுண்டா' என்றழைக்கப்படுவதும் துர்க்கைக்கு எல்லாம் சிவப்பு; வர்ணம் சிவப்பு; வஸ்திரம் சிவப்பு; அணிமணிகள் சிவப்பு; ஆயுதமும் சிவப்பு; கண்களில் சிவப்புச் செந்தணல்தான். நகங்கள் இயற்கையிலேயே சிவப்பா? எதிரியைக் கிழித்து அவர்களது குருதியால் சிவந்தவை என்று சொல்ல இயலாது. 'ரக்ததந்திகா' என்று பெயர் பெறும் இவள் தனது நான்கு கரங்களில் கத்தி, மதுப்பாத்திரம், உலக்கை, கலப்பை இவற்றைத் தரித்திருப்பாள். இவள் கோரவடிவினளாயினும் ஞானமயமான யோகீஸ்வரி இவள் என்றார்.

நவராத்திரி நாயகி ஆசிரியர்
ரா. கணபதி (1998)

"அறிந்து செய்தாலும் அறியாமல் செய்தாலும் அன்புடன் ஏற்கிறேன்" என்கிறாள் அம்பாள் என்பது ஞானிகளின் முடிவு.

"பாபமும் கோபமும் போகப்பாராயணம் கண்கண்ட மருந்து".

"மெய்ஞ்ஞானத்திடம் இன்ப நுகர்ச்சி காணும் எண்ணம் அதை ஆராய்கின்ற அஞ்ஞானத்திற்கு இல்லை" என்றுமே அஞ்ஞானம் ஞானத்திடம் தொடர்பு கொள்வதில்லை.

பரம்பொருளை உலக மாதாவாக மகாகாளியாகக் கண்ட மகாகவி பாரதியின் இதயம் மக்கள் பாடும் காவடிச்சிந்தில் அவளுடைய புகழை பரவசமாகப் பாடிற்று. இப்பாடல்களைத் துள்ளல் நடையிலே சிந்து நடையிலே பாடி நாமும் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவருட் கருணைக்கு பாத்திரமாவோமாக.

### காவடிச்சிந்து – காளிப்பாட்டு

*"காலமாம் வனத்திலண்டக் கோலமாமரத்தின் மீது*
*காளிசக்தி என்ற பெயர் கொண்டு – ரீங்*
*காரமிட்டுலவுமொரு வண்டு – தழல்*
*காலும் விழி நீலவண்ண மூல அத்துவாக்கமெனும்*
*கால்கலாளுடைய தெனக் கண்டு – மறை*
*காணுமுனிவோர் உரைத்தார் பண்டு"*

(காலமாம்......)

*மேலுமாகி கீழுமாகி வேறுள திசையுமாகி*
*விண்ணும் மண்ணும் ஆசைசக்தி வெள்ளம் – இந்த*
*விந்தையெல்லாம் ஆங்கது செய்கள்ளம் – பழ*
*வேதமாயதன் தன்னுள்ள நாதமாய் விளங்குகிறது*
*வீரசக்தி வெள்ளம் விடும் பள்ளம் – ஆக*
*வேண்டுநித்தம் என்றான் ஏழை உள்ளம்.*

(காலமாம்......)

*அன்புவடிவாகி நிற்பள் துன்பமெல்லாம் அவள் இழைப்பள்*
*ஆக்க நீக்கம் யாவும் அவள் செய்கை – அவள்*
*ஏதுமற்றமெய்ப் பொருளின் சாயை*
*ஆதியாம் சிவனும் அவன் சோதியான சக்தியும்தான்*
*அங்குமிங்கும் எங்கும் உமையாகும் – இந்த*
*அறிவுதான் பரமஞானமாகும் – தந்த*
*நித்தமுத்த சுத்தபுத்த சத்தபெரும் காளிபத*
*நிழலடைந் தார்க்கில்லைபோர் தீது – என்று*
*நேர்மை வேதம் சொல்லும்வழியீது.*

(பாரதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர ஆழ்வார் மகாகும்பாபிஷேகம்

*சிவஸ்ரீ கணபதி சாமி குரு, புருஷோத்தம குரு*

*ஆலய பிரதமகுரு*

*வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம், வல்லிபுரம்.*

தெக்ஷணாகைலாச மான்மியத்தில் ஸ்கந்த புராண பிரிவில் எழுவான் திசையில் ஆலிலையில் துயில் கொண்ட காரணத்தால் துன்னாலை வடக்குப் பகுதியில் வல்லிபுரம் எனும் பதியில் மஹாவிஷ்ணுவின் மச்சாவதாரத்தின் மோக்ஷ நிலையில் லவ – வல்லி – நாச்சியாருக்கு முத்தி கொடுத்து சிவபெருமானால் வழங்கப் பெற்ற மஹாவிஷ்ணுவின் வலது கரத்திலுள்ள சுதர்ஸன சக்கரத்தை சிவன்– விஷ்ணுவும் அந்த இடத்தில் பிரதிஷ்டை செய்து சக்கரத்தை வழிபட்டால் எங்கள் இருவரையும் வழிபட்ட பலன் கிடைக்குமென்றும் சந்தான விருத்திகள் உண்டாகும் என்றும் அருளினார்.

இவ்வாறு புராதன சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் ஆதிகாலத்தில் தகுதிவாய்ந்த அந்தணர்கள் இல்லாத காரணத்தால் அவ்வூர் மக்கள் மாதகல் என்னுமிடத்திலிருந்து குருக்கள் பரம்பரையினரை அழைத்து வந்து நித்ய பூஜைகள் நடாத்தினர்.

பிரம்மஸ்ரீ கருணாகரக் குருக்கள் அவர்கள் மேற்படி ஆலய நித்ய, நைமித்ய கிரியைகளை நடாத்திவந்தார். பின்னர் அவர் பிரம்மச்சரிய வாழ்க்கை வாழ்ந்த காரணத்தால் அன்னாரின் சகோதரியின் மகனான சிவஸ்ரீ கணபதி சாமிக் குருக்களை நியமித்து நித்ய நைமித்ய கிரியைகள் நடைபெற்றுவந்தன. பின்னர் 1950ல் மஹாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ கணபதி சாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. 1969ல் சிவஸ்ரீ கணபதி சாமிக் குருக்கள் அமரத்துவம் அடைந்ததின் பின்னர் அவரது புதல்வர்களான சக்கரத்தாள்வாரின் நாமங் கொண்ட மூத்த புதல்வன் சிவஸ்ரீ சுதர்ஸனக்குரு, சிவஸ்ரீ இராமச்சந்திரக் குரு, சிவஸ்ரீ புருஷோத்தம குரு ஆகியோர். ஆலய கடமைகளை பொறுப்பேற்று நாடாத்திவரும் வேளையில் ஆலயம் பொது மக்களினால் தெரிவு செய்யப் பெற்ற நிர்வாக சபையினரிடம் ஆலய நிர்வாகப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன.

புதிய நிர்வவாக சபையினர் பொறுப்போற்ற பின்னர் வெகுகாலம் கும்பாபிஷேகம் பண்ணப்படாமல் ஆலயம் நித்ய பூஜைகளோடு இருந்தவேளை.

புனர்நிர்மானம் செய்யப்பட்டு 1977ல் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமான் தேவஸ்தான பிரதம குருவும், இன்றைய 'பவளவிழா' நாயகருமாகிய இலங்கையின் தலைசிறந்த சிவாச்சாரியாருமாகிய நவாலியூர் "பிரதிஷ்டா சிரோமணி" பிரமஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் தனது மருமக்களின் வளர்ச்சிக்காக தனது சொந்த கைங்கரியமாக என்னி சிறப்புற மஹாகும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தார்.

அதன் பின்னர் சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களின் கைராசியினால் ஆலயம் வளர்ச்சி பெற்று ஸப்ததளராஜ கோபுரத்துடன் ஆலயம் புதுப் பொலிவு பெற்று 1990ம் ஆண்டு ஜுன் மாதம் 13ம் திகதி ஆலயத்தின் பிரதம குருவாக விளங்கிய ஆலய பரம்பரைக் குருவான சிவஸ்ரீ கணபதி சாமி குரு இராமச்சந்திரக் குரு தலைமையில் அவருக்கு உறுதுணையாக முத்தமிழ்க் குருமணி சுன்னாகம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், ஆலயத்தின் தற்போதைய பிரதம குருவான சிவஸ்ரீ கணபதி சாமி புருஷோத்தம குரு, இன்றைய சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியர் உட்பட 60 குருமார்களைக் கொண்டு பஞ்சவிம்சதி (25 குண்டம்) குண்டகக்ஷ மஹா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக 20ம் நூற்றாண்டில் நிறைவேறியது.

அதனைத் தொடர்ந்து நித்ய, நைமித்ய கிரிகைகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. 21ம் நூற்றாண்டான 2001 ஜுன் மாதம் 10ம் திகதி முன்னைய கும்பாபிஷேக தினமான திருவோண நச்சத்திரதில் மேற்படி ஆலய பரம்பரைக் குருவும் மலேசியா ஜோகூர்பார் குளம் ஆயர் ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலய பிரதமகுருவுமான பிரதிஷ்டா கிரியாரெத்னம் சிவஸ்ரீ கணபதி சாமி குரு இராமச்சந்திரக் குருக்கள் தலைமையில் சுன்னாகம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ புருஷோத்தம குரு, சிவஸ்ரீ சுதர்ஸன குரு உட்பட 15 குருமார்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்தி வைத்தனர்.

மேற்படி ஆலய கும்பாபிஷேகத்திற்கென பரம்பரைக் குருவான சிவஸ்ரீ கணபதிசாமி இராமச்சந்திரக்குரு மலேசியாவிலிருந்து வருகைதந்து கும்பாபிஷேத்தை பிரதமகுருவாக இருந்து நடாத்திய அவ்வூர் மக்களின் மனதில் பெரும் சந்தோஷத்தை ஏற்படுத்தியது.

மேற்படி கும்பாபிஷேக பிரதம குருவான சிவஸ்ரீ கணபதிசாமிக் குரு இராமச்சந்திரக் குருக்கள் அவர்களுக்கு பிரதமகுருவும், பொதுமக்களும், நிர்வாக சபையினரும் இணைந்து தங்கப்பதக்கம் சூட்டி, பொன்னாடை போர்த்தி "பிரதிஷ்டா பூஷணம்" என்ற சிறப்புப்பட்டமளித்து கௌவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம் தரும் வேதம் – ஆகமம் – யாகம்

எஸ். நாராயணசுவாமி, ஏ. எம். ஏ. எம். எட்,
*ஆசிரியர், திருவாவடுதுறை ஆதீனக்கல்வி நிலையம்,*
*திருவிடைமருதூர்.*

(இக்கட்டுரை ஆசிரியர் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகத்தில் யாவரும் பொதுவாக அறிதல் வேண்டி வேதம், ஆகமம், யாகம், யாகத்திற்குரிய பொருள்கள், பிறபலன்கள் ஆகியன தொகுத்து வழங்கியுள்ளார்).

ஓம் என்ற மூலமந்திரத்தை விளக்க வந்தது வேதாகமம். அது ஈஸ்வரனின் அருளையும், புருஷர்களுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பையும், தொடர்பினால் ஏற்படுகின்ற பாசத்தையும் விடுவிக்கின்ற முறையினையும், பாசத்தை விட்டதனால் மனிதன் (பசு) சர்வேஸ்வரனின் திருவருளுக்குப் பாத்திரமாகின்றான் என்பதையும் விளக்குகிறது.

மேற்கண்ட கருத்தை விளக்க வந்ததுதான் நான்கு வேதங்களும், அதன் முடிவாக அமைந்த உபநிஷத்துக்களுக்கும், அதன் பிறகு வந்த ஆகமங்களும் ஆகும்.

## ஆகமத்தின் பொருள்

காமிகம் முதலிய சிவஞானம் ஊர்த்துவச் சுரோதோற்பவங்களாகி மேன்முகத்திற் பிறந்தன, என்று காமிகாமம் கூறுகின்றது. வேதங்களான இருக்கு, யசுர், சாமம், அதர்வம், என்பது சிவனது மற்றைய முகங்களில் பிறந்தன.

இந்தச் சிவாகமங்கள் காமியம் முதலாக இருபத்தெட்டு ஆகமங்களாம்.

1) ஆ – என்பது பாசம், க – என்பது பசு, ம – என்பது பதி (உலகம், ஆன்மா, கடவுள்). ஆகவே முப்பொருள் உண்மையை விளக்க வந்ததுதான் ஆகமம் என்று புலப்படுகிறது.

2) ஆ – என்பது சிவஞானமும், க – என்பது மோட்சமும், ம – என்பது மலநாசமும் ஆகும். ஆன்மாக்களிடத்தில் இருக்கும் மும்மலத்தையும் நாசம் செய்து சிவஞானத்தை தோற்றுவித்து மோட்சத்தைக் கொடுக்கவல்லது ஆகமமேயாகும்.

இதனை மணிவாசகர் கூறுகையில்,

*ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாழ் வாழ்க*

என்று திருவாசகத்தில் கூறுகின்றார்.

## ஆகமங்கள்

| | | |
|---|---|---|
| (1) காமிகம் | (2) யோகசம் | (3) சிந்தியம் |
| (4) காரணம் | (5) அசித்தம் | (6) தீப்தம் |
| (7) சூக்குமம் | (8) சகச்சிரம் | (9) அம்சுமான் |
| (10) சுப்பிரபேதம் | (11) விஜயம் | (12) திக்வாசம் |
| (13) சுவாயம்புவம் | (14) ஆக்கினேயம் | (15) வீரம் |
| (16) ரௌரவம் | (17) மகுடம் | (18) விமலம் |
| (19) சந்திரஞானம் | (20) முகவிம்பம் | (21) புரோற்கீதம் |
| (22) லலிதம் | (23) சித்தம் | (24) சந்தானம் |
| (25) சர்வோக்தம் | (26) பாரமேசுரம் | (27) பிரணம் |

(28) வாதுளம் முதலியன. மேலும் இதனுள் 207 உபாகமங்களும் உள்ளன.

## ஆகமத்தினுள்ளே

இவ்வாகமங்கள் மந்திரமெனவும், சித்தாந்த மெனவும் பெயர் பெறுகின்றன. இந்த இருபத்தெட்டுச் சிவாகமங்கள் ஒவ்வொன்றுக்கும் கோடி கிரந்தமாக இருபத்தெட்டுக் கோடி கிரந்தங்கள் உள்ளன. இவைகள் (1) ஞானபாதம், (2) யோகபாதம், (3) கிரியாபாதம், (4) சரியாபாதம் என்று நான்கு பாதங்களாக அமைந்துள்ளன.

(1) பதி, பசு, பாசம் (கடவுள், ஆன்மா, உலகம்) என்னும் முப்பொருளின் உண்மையை ஞானபாதம் விளக்குகின்றது.

(2) பிராணாயாமம் முதலிய அங்கங்களோடும் கூடிய சிவயோகத்தை யோக பாதம் விளக்குகின்றது.

(3) மந்திரங்களின் உத்தாரம், சந்தியாவந்தனம், பூசை, செபம், ஓமம் என்பவைகளையும் விளக்கி, சமய தீட்சை, விஷேச தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரியாபிஷேகம் முதலியவைகளைக் கிரியாபாதம் விளக்குகின்றது.

(4) சமயாசாரங்களையும் அதன் நுட்பங்களையும் தொண்டு செய்கின்ற வழிமுறைகளையும் சரியாபாதம் விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இருபத்தெட்டு சிவாகமங்கள் சிவபெருமானது ஒவ்வொரு அவயவத்தைப் பொருந்துவது போல அமைந்துள்ளன.

ஆகமங்களின் விஷயங்கள் வேதங்களில் நேரிடையாகக் கூறப்படாமல் சுலோகமாகச் சொல்லப்பட்டுள்ளன. மேலும் வேதச் சொற்கள் நுட்பமான சொற்களினாலும், ஆகமங்கள் எளிய சொற்களினாலும் (விரிவுரை போன்று) அமைந்துள்ளன. வேத வாக்கியங்கள் சுரோகமாதால் பல பொருளாகக் கொள்ளப்படும். ஆகமம் தெளிந்து உணர்த்தும் விரிவுரையாகப் பொருள் கொள்ளக் கூடியதாகும்.

## வேதாந்தம்

வேதங்களின் முடிவாக அமைந்த உபநிஷத்துக்கள் தான் வேதாந்தமாகும். வேதம் + அந்தம் (முடிபு) – வேதாந்தம். இந்த வேதாந்தத்திற்கு விளக்கம் அளித்தவர்கள் தாம் ஆதிசங்கரர், இராமனுஜர், மத்துவர் முதலியோர். பிறகு இவர்கள் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் செய்யும் போது தங்கள் விளக்கத்திற்கு, அத்வைதம் விசிஷ்டாத்வைதம், துவைதம் என்று பெயர் சூட்டினர்.

## இருக்கு வேத உபநிஷத்துக்கள்

இந்த இருக்கு வேதம் 21 சாகைகளைக் கொண்டது.

(1) ஐத்ரேய (2) கௌஷீதகீ
(3) நாதவிந்து (4) ஆத்மப்பிரபோதம்
(5) நிருவாண (6) முத்கலை
(7) அட்சமாளிகை (8) திரிபுரை
(9) சௌபாக்கியம் (10) வக்விருச்சானை என்ற பத்து உபநிஷத்துக்கள் கொண்டதாகும்.

## யஜுர்வேத உபநிஷத்துக்கள்

இவ்வேதம் 180 சாகைகளைக் கொண்டது. இதனுள் 51 உபநிஷத்துக்கள் உள்ளன. அவையாவன:

(1) கடவல்லி (2) தைத்திரியம்
(3) பிரமம் (4) கைவல்லியம்
(5) சுவேதாச்சுவதரம் (6) கர்ப்பம்
(7) நாராயணம் (8)அமிர்தவிந்து
(9) அமிர்தநாதம் (10)காலாக்கினிருத்ரம்
(11) சுரிகை (12) சர்வசாரம்
(13) சுகரகசியம் (14) தேசோவிந்து
(15) தியானவிந்து (16) பிரமவித்தியை
(17) யோகதத்துவம் (18) தட்சணாமூர்த்தி
(19) கந்தம் (20) சாரீகம்
(21) யோகசிகை (22) ஏகாச்சரம்
(23) அட்சியம் (24) அவதூதம்
(25) கரம் (26) உருத்திரவிருதயம்
(27) யோககுண்டலினி (28) பஞ்சப்பிரமம்
(29) பிரானாக்கினி, கோத்ரம் (30) வராகம்
(31) கலிசந்தரணம் (32) சரசுவதி
(33) ஈசாவாசியம் (34) பிருகதாரணியம்
(35) சாபாலம் (36) அம்சம்
(37) பரமஹசம் (38) சுபாலம்
(39) மந்திரிகை (40) நிராம்பலம்
(41) திரிசிகி (42) மண்டலம்
(43) அத்துவயதாரகம் (44) பைங்கலம்
(45) பிட்சு (46) துரியாதீதம்
(47) அத்தியாத்துமம் (48) தாரசரம்
(49) யாக்ஞவல்கியம் (50) சாட்டியாயனி
(51) முத்திகம்

## சாமவேத உபநிஷத்துக்கள்

இந்தவேதம் 1000 சாகைகளைக் கொண்டது. இதனுள் 16 உபநிஷத்துக்கள் உள்ளன.

(1) கேணம் (2) சாந்தோக்கியம்
(3) ஆருணி (4) மைத்திராயணி
(5) மைத்திரேயி (6) வச்சிரசூசிகம்
(7) யோகசூடாமணி (8) வாசுதேவம்
(9) மகத்து (10) சந்நியாசம்
(11) அவ்வியக்தம் (12) குண்டிகை
(13) சாவித்திரி (14) உருத்திராக்க சாபாலம்
(15) தரிசனம் (16) சாபாலம்
முதலியன ஆகும்.

## அதர்வணவேத உபநிஷத்துக்கள்

இவ்வேதம் 50 சாகைகளைக் கொண்டது. இதனுள் 31 உபநிஷத்துக்கள் உள்ளன.

(1) பிரச்சினம் (2)முண்டகம்
(3) மாண்டுக்கியம் (4) அதர்வசிரசு
(5) அதர்வசிகை (6) பிருகச்சாபலம்
(7) நிருசிம்மதாபினி (8) நாரதபரி
(9) விராசகம் (10) சீகை
(11) சரபம் (12) திரிபாத்வீய மகாநாராயணம்
(13) இராமரகசியம் (14) இராமதாபினி
(15) சாண்டில்யம் (16) பரமஹம்சபரி
(17) அன்னபூரணை (18) சூரியன்
(19) ஆத்மம் (20) பாசுபதம்
(21) பரப்பிரம்மம் (22) திரிபுராதபினி
(23) தேவி (24) பாவனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(25) பஸ்மசாபாலம் (26) கணபதி மகாவாக்கியம்
(27) கோபாலதபனம் (28) கிருஷ்ணம்
(29) ஹயக்கிரீவம் (30) தத்தாத்ரேயம்
(31) காருடம் முதலியன ஆகும்.

வேதத்தின் ஞானகாண்டமும், ஆகமத்தின் ஞானகாண்டமும் முப்பொருள் உண்மையை விளக்க வந்தவையாகும். சனகாதி முனிவர்கள் கூறுகையில் சித்தாந்தத்தின் கருத்துக்களை வேதமும், ஆகமங்களும் தன்னகத்தே நிறுத்தியும் பல்வேறு வழிகளைக் காட்டியும் உண்மைப் பொருளை உள்ளவாறு வேதாகமங்கள் விளக்குகின்றன என்று தெளிவுபடுத்தியுள்ளனர். இவ்வாறான வேதங்கள் – ஆகமங்கள், ஆகமங்களில் தெய்வத் திருமேனிகளுக்கு உரிய யாகங்கள் யாவும் இன்றைக்கும் திருக்கோயில்களில் நிகழ்த்தப் படுகின்றன. யாகசாலைகள், யாகமந்திரங்கள், யாக திரவியங்கள், அபிஷேகங்கள், உபசாரங்கள் யாவும் பல நிலைகளில் விரிவாகவும், சுருக்கமாகவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றதை யாவரும் அறிவர்.

யக்ஞம், யாகம், ஹோமம், வேள்வி, ஓமம் என்ற சொற்கள் ஒரே பொருளைத் தருவனவாகும். கடமை என்ற சொல்லிற்கு நம் முன்னோர்கள் வகுத்த சொற்களாகும். இறைவனுக்கு யாகம் செய்து வழிபடுவதும் ஒரு நல்ல கடமையாகும். யாகத்தின் மூலமாக முழுமையான பலனை அடையலாம். யாகத்தின் ரூபமாக சிவன் விளங்குகின்றார் என்பதனை யக்ஞ ரூபய நமஎன்ற பதம் விளங்குகின்றது.

## ஐவகை யாகம்

(1) சிவனை எண்ணுதல், சிவபூசை செய்தல் கர்மயாகம் ஆகும். (2) உடம்பை வளர்க்காது விரதம் இருந்து ஐம்புலனை அடக்குதல் தவயாகமாகும். (3) சிவமூலமந்திரம் (பஞ்சாட்சரம்) ரூத்ரம் முதலான மந்திரங்களை ஜபித்தல், ஜபயாகம் ஆகும். (4) சதாகாலம் சதாசிவனை தியானித்தல் தியான யாகம் ஆகும். தியானத்தினால் இறைவனது அருளால் ஞானத்தைப் பெற்று அந்த ஞானாதீதத்தில் திளைத்திருப்பது ஞானயாகம் என்று இவை ஐவகை யாகங்களாகும்.

## மற்றைய யாகங்கள்

கணபதி முதலான அனைத்துத் தெய்வங் களுக்கும் யாகாதி விசேஷங்கள் உண்டு. இவை தவிர ஆன்மாக்களின் இஷ்ட காம்யங்களை பூர்த்தி செய்யும் யாகங்களும் உண்டு. சிறப்பாக ஏககாலத்தில் பிரதான மூர்த்தியோடு இந்திராதி முதலான அனைத்து விசேஷ மூர்த்திகளுக்கு திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் என்ற முறையில் விசேஷ யாகங்கள் பல காலங்களோடு அனுசரித்து செய்யப்படுவதாகும். இந்த யாகங்கள் சிறப்பினுள் சிறப்பாகும்.

## யாகசாலையின் பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| குகபதம் | – 1 | தத்வ பதம் | – 64 |
| சக்திபதம் | – 8 | புவன பதம் | – 72 |
| நாத பதம் | – 18 | மந்த்ர பதம் | – 80 |
| பிந்து பதம் | – 24 | பத பதம் | – 88 |
| சதாசிவ பதம் | – 32 | வர்ண பதம் | – 96 |
| சதாசிவ பதம் | – 40 | ருத்ர பதம் | – 104 |
| மகேசுர பதம் | – 48 | விஷ்ணு பதம் | – 112 |
| சுத்தவித்யாபதம் | – 56 | பிரம்ம பதம் | – 120 |
| சுத்தமாயா பதம் | – 128 | கண பதம் | – 192 |
| மிச்ரமாயா பதம் | – 136 | சித்த பதம் | – 200 |
| கலா பதம் | – 144 | ஆர்ஷ பதம் | – 208 |
| காலம் பதம் | – 152 | யக்ஷ பதம் | – 216 |
| நியதி பதம் | – 160 | கதர்வ பதம் | – 224 |
| வித்யா பதம் | – 168 | கந்தர்வ பதம் | – 232 |
| ராக பதம் | – 176 | ரக்ஷாபதம் | – 240 |
| வேத பதம் | – 184 | மாநவ பதம் | – 248 |

## யாக சமித்துகள்

| | |
|---|---|
| 01. வெள்ளெருக்கு | 17. அறுகு |
| 02. பலாசு | 18. சந்தனக்கட்டை |
| 03. கருங்காலி | 19. வெள்ளெருக்கு |
| 04. நாயுருவி | 20. வெட்டிவேர் |
| 05. அரசு | 21. விளாமிச்சவேர் |
| 06. மா | 22. செஞ்சந்தனக்கட்டை |
| 07. வில்வம் | 23. அகில் |
| 08. வன்னி | 24. தேவகாரு |
| 09. அத்தி | 25. பாதிரி |
| 10. ஆல் | 26. செண்பகம் |
| 11. பலா | 27. அசோகம் |
| 12. புன்னை | 28. குங்கிலியம் |
| 13. மகிழ் | 29. நெல்லி |
| 14. மூங்கில் (முள்நீக்கியது) | 30. மாவிறகு |
| 15. மாதுளை | 1 அடி நீளம் கைப்பருமன் |
| 16. கிளுவை | 31. அரசு |
| | 1 அடி நீளம் கைப்பருமன் |

(குறிப்பு: 1 முதல் 19 வரை உள்ள சமித்துக்கள் 9 அங்குல நீளம் விரல் பருமனாகவும் 20 முதல் 29 முடிய 6 அங்குல நீளம் விரல் பருமனாகவும் இருக்க வேண்டும். )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாக குண்டம்

1. சதுர குண்டம்
2. யோனி குண்டம்
3. அர்த்த சந்திர குண்டம்
4. திரியகோண குண்டம்
5. ஷட்யோண குண்டம்
6. பத்ம குண்டம்
7. விருத்தகுண்டம்
8. அஷ்டகோணகுண்டம்
9. பிரதானமான விருத்த குண்டம்

### குடத்தில் சுற்றப்படும் நூல்

குடத்தில் சுற்றப்பட்டுள்ள நூ மூன்று உள்ளதாக இருக்க வேண்டும். இந்த சுற்றுக்கள் உத்தமம், மத்திமம், அதமம் எனப்படும்.

1. உத்தமம் : நூல் சுற்றப்பட்டுள்ள இடைவெளி எள் அளவு இருப்பது.
2. மத்திமம் : நெல் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது.
3. அதமம் : யானையின் கண் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது.

### அஷ்டபந்தன திரவியங்கள்

| | |
|---|---|
| (1) சுக்கான்கல் | (2) குங்கிலியம் |
| (3) கொம்பரக்கு | (4) தேன்மெழுகு |
| (5) நற்காவி | (6) செய்பஞ்சு |
| (7) சாதிலிங்கம் | (8) எருமை வெண்ணெய் |

### கணபதிக்கு உரிய சிறப்பு ஹோம திரவியங்கள்

அறுகு, மோதகம், அவல், நெற்பொரி, சத்துமா, கருப்பங்கழி, தேங்காய்க்கீற்று, சுத்தமானஎள், வாழைப்பழம். இவைகளில் தேன், நெய், பால், வெல்லம் இவைகளைச் சேர்த்து ஹோமம் செய்ய வேண்டும்.

### தீர்த்தங்கள்

திருக்குடங்களில் சேர்க்கப்படும் தீர்த்தங்கள் கங்கை, யமுனை, கிருஷ்ணா, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, சரசுவதி, குமரி, பயோஷ்ணி, சரயு மற்றும் அவ்வத் தலங்களில் பிரதானமாக விளங்கும் தீர்த்தத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### வாசனைப் பொருள்கள்

கொட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம்.

### எட்டுவகைத் தானியங்கள்

நெல், கம்பு, வரகு, தினை, சாமை, சோளம், துவரை, மூங்கில்நெல்.

### பஞ்ச குண்ட விபரம்

1. கிழக்கில் – அஹவனியாக்னி – சதுரகுண்டம்
2. தெற்கில் – தக்ஷினாக்னி – அர்த்தசந்திர குண்டம்
3. மேற்கில் – கர்ஹபத்யம் – விருத்தகுண்டம்
4. வடக்கில் – கேவலாக்னி – பத்மகுண்டம்
5. வடகிழக்கில் – சிவாக்னி – விருத்தம் அல்லது சதுர குண்டம்

### நவகுண்டம்

1. கிழக்கு – அஹனியாக்னி – சதுரகுண்டம்
2. தென்கிழக்கு – விருத்தாக்கினி – யோனிகுண்டம்
3. தெற்கு – தக்ஷிணாக்னி – அர்த்தசந்திர குண்டம்
4. தென்மேற்கு – யௌவனாக்னி – திரிகோண குண்டம்
5. மேற்கு – கார்ஹபத்யாக்னி – விருத்தகுண்டம்
6. வடமேற்கு – பாலாக்னி – அறுகோண குண்டம்
7. வடக்கு – கேவலாக்னி – பத்மகுண்டம்
8. வடகிழக்கு – சாமான்யாக்னி – எண்கோண குண்டம்
9. ஈசான்யம் – சிவாக்னி – விருத்த குண்டம்

### ஸ்நபனங்களின் எண்ணிக்கை (கும்பங்கள்)

01. நவகலச ஸ்நபனம்
02. சப்த தச கலசஸ்நபனம்
03. பஞ்சவிம்சதி கலச ஸ்நபனம்
04. ஏகோநபஞ்சாசத் கலச ஸ்நபனம்
05. ஏகாசீதி கலச ஸ்தபனம்
06. நவோத்ரசத கலச ஸ்நபனம்
07. நவோத்ர சதுர்விசத கலச ஸ்நபனம்
07. நவோத்ர சதுர்விசத கலச ஸ்நபனம்
08. நவோத்ர சகஸ்ர சகல ஸ்நபனம்
09. நவோத்ர சகஸ்ர சலக ஸ்நபனம்
10. சகஸ்ர சங்க மகா ஸ்நபனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதக திரவியங்கள்

| | |
|---|---|
| 1. ரத்தினோதகம் | 13. பலோதகம் |
| 2. லோகோதகம் | 14. காஷாயோதகம் |
| 3. தாதூதகம் | 15. ஆர்கோதம் |
| 4. பீஜோதகம் | 16. காந்தோதகம் |
| 5. சுத்தோதகம் | 17. மூலதோயம் |
| 6. மிருதூதகம் | 18. சாந்தியுதோகம் |
| 7. மார்ஜன உதகம் | 19. புஷ்கரோதகம் |
| 8. பத்திரோதகம் | 20. கோதுமை |
| 9. பரிமார்ஜன உதகம் | 21.குளச்செந்நெல் |
| 10. புஷ்போதகம் | 22. சந்தனாதித் தைலம் |
| 11. மான்யோதகம் | 23. நெல்லிமுள்ளி |
| 12. அஸ்திரோதகம் | 24. மஞ்சள்மா |

### ஆசனம்

1. பிருதிவி தத்துவம் – கூர்மாசனமும்
2. உபவேதிகை – அனந்தாசனமும்
3. நெல் – யோகசனமும்
4. அரிசி – பதுமாசனமும்
5. எள் – விமலாசனமும்
6. நெல் மற்றும் மலர் – சத்தியாசனமுமாகப் பிருதுவி முதற் குடிலையீறாகிய தத்துவங்களுக்கும் பஞ்சாசனமாக அமைந்துள்ளன.

### மந்திர வகைகள் (பொது)

| | |
|---|---|
| 1. மூலமந்திரம் | 36. பஞ்ச தசாக்கரி மந்திரம் |
| 2. பீஜமந்திரம் | 37. சோடாசாக்ஷிரி மந்திரம் |
| 3. பஞ்சமந்திரம் | 38. தடை மந்தரம் |
| 4. சடங்க மந்திரம் | 39. விடை மந்தரம் |
| 5. சம்ஹிதாமந்திரம் | 40. பிரசதா மந்திரம் |
| 6. பதமந்திரம் | 41. உருத்திர மந்திரம் |
| 7. மாலா மந்திரம் | 42. சூக்த மந்திரம் |
| 8. சம்மேளன மந்திரம் | 43. ஆயுள் மந்திரம் |
| 9. காயத்திரி மந்திரம் | 44. இருதய மந்திரம் |
| 10. அசபா மந்திரம் | 45. கவச மந்திரம் |
| 11. பிராண பிரதிட்டா மந்திரம் | 46. நியாச மந்திரம் |
| 12. மாத்ருகா மந்திரம் | 47. துதி மந்திரம் |
| 13. மோன மந்திரம் | 48. உபதேச மந்திரம் |
| 14. சாத்ய மந்திரம் | 49. தாரக மந்திரம் |
| 15. நாம மந்திரம் | 50. ஜெபசமர்ப்பண மந்திரம் |
| 16. பிரயோக மந்திரம் | 51. நீல கண்டம் |
| 17. அத்திர மந்திரம் | 52. மிருத்யுஞ்சயம் |
| 18. விஞ்சன மந்திரம் | 53. தட்சிணா மூர்த்தி |
| 19. பசிநீக்கு மந்திரம் | 54. சரபம் |
| 20. விண்ணியக்க மந்திரம் | 55. வீரபத்ரம் |
| 21. வேற்றுரு மந்திரம் | 56. விநாயகம் |
| 22. துயில் மந்திரம் | 57. சண்முகம் |
| 23. திரஸ்கரிணி மந்திரம் | 58. பைரவம் |
| 24. சட்கர் மந்திரம் | 59. நாரசிங்கம் |
| 25. அஷ்டகர்ம மந்திரம் | 60. நவக்கிரகம் |
| 26. பஞ்சகிருத்ய மந்திரம் | 61. வாலை |
| 27. அகமருடண மந்திரம் | 62. புவனை |
| 28. ஏகாக்ஷ மந்திரம் | 63. திரிபுரை |
| 29. திரியக்ஷரி மந்திரம் | 64. துர்க்கை |
| 30. பஞ்சாக்ஷர மந்திரம் | 65. அசுவாருடி |
| 31. சடாக்ஷர மந்திரம் | 66. சப்தமாதா |
| 32. அஷ்டாகூர மந்திரம் | 67. முப்பத்து முக்கோடி தேவர்கள் |
| 33. நவாக்கரி மந்திரம் | 68. பதினெண்கணம் |
| 34. தசாக்ஷர மந்திரம் | 69. போகினியர் |
| 35. துவாதச நாம மந்திரம் | 70. காலக்கடவுள் |

### சப்த கோடி (முடிவு) மகா மந்திரங்களின் விளக்கம்.

**1. நம**

வணக்கம், தம்பனம் – நிலைநிறுத்தல், இறைத் திருவருள் தன்னில் நிலைக்க வேண்டல். இது மூல மந்திரங்களின் முடிவில் வைக்கப்படும்.

**2. ஸ்வாஹா**

இது பெரும்பாலும் ஓமித்தலில் பயன்படுகிறது. ஒரு மந்திரத்தின் உபாசனா தேவதைக்கு ஓமத்தில் அளிக்கப்படும் பொருள் கொண்டு அத் தேவதை திருப்தியுற வேண்டும் என வேண்டுதல் ஆகும்.

**3. வஷட்**

இதன் மூலம் நம விழைவு எதையும் தன் வயப்படுத்தல் (வசியம்) என்பது உணர்த்தப்படுகிறது.

**4. வௌஷட்**

இது நமது விருப்பம் எப்பொருளையும் தன் அருகாமையில் ஈர்த்துக் கொள்ளல் (ஆகர்ஷணம்) ஆகும்.

**5. ஸ்வதா**

இது எரியிலிடாது தேவர்கட்கும், இருடிகட்கும், முனிவர்க்கும், பிதிரர்கட்கும், கணங்கட்கும், உலகிலய்ய ஆன்ம கோடிகட்கும் அளிக்கப்படும் பொருள்கள் அவ்வப் பிரிவினர்க்கு மகிழ்வு (துஷ்டி) அளிக்க வேண்டுதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஹூம்

இது மந்திர / அஸ்திர தேவதைகள் தன் பகைவரை அச்சுறுத்தி அவர்களைத் தனக்குப் பணிய வைப்பதை வேண்டுவதாம்.

7. பட்

ஏவிய காரியத்தை உடன் முடிக்க வேண்டுதல் (விஜர்ஜனம்) இதன் குறிக்கோள் ஆகும்.

(குறிப்பு : பெரும்பாலும் இவையிரண்டையும் கூட்டி ஹூம்பட் என்றே பயன்படுத்துவர்.

8.ஹை ஹை

இதன் பயன் தன் பகைகள் முற்றிலும் செயலற்ற நிலை (மரணம்) பெற உந்துவதாகும்.

இவ்வாறு இக்கோடி மந்திரங்களைத் தனித்தனியாகவும் இரண்டு அல்லது மூன்றினைக் கூட்டியும் பயன்படுத்துவது மந்திர சாஸ்திரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

*யாகசாலைக்குரிய திரவியங்கள்*

| | |
|---|---|
| மஞ்சள்பொடி | சாம்பிராணி |
| திரவியப்பொடி | குங்குமப்பூ |
| மாப்பொடி | பச்சைக் கற்பூரம் |
| குங்குமம் | ஏலக்காய் |
| சந்தனம் | கிராம்பு |
| பஷ்பம் | பன்னீர் |
| நல்லெண்ணெய் | ஜலதிரவியம் |
| கடலை எண்ணெய் | தேங்காய் |
| பசுநெய் | இளநீர் |
| பசும்பால் | வாழையிலை |
| பசுந்தயிர் | பச்சையரிசி |
| எலுமிச்சம்பழம் | தொன்னை |
| நாரத்தம்பழம் | வாழைக்காய் |
| பூவன் பழம் | மூங்கில் தட்டு |
| வெற்றிலை | விசிறி |
| பாக்கு | உழுந்து |
| சீவல் | பயறு |
| சூடம் | கடுகு |
| பத்தி | பிள்ளைப்பூண்டு |
| ஆரஞ்சு | கடலை |
| சாத்துக்குடி | கோதுமை |
| தம்பரத்தம்பழம் | மொச்சை |
| வில்வப்பழம் | கொள்ளு |
| விளாம்பழம் | எள் |
| கொடிமுந்திரிப் பழம் | அகில் |
| கரும்பு | முகில் |
| பலாப்பழம் | தேவதாரு |
| மாம்பழம் | சந்தனக்கட்டை |
| கருப்பஞ்சாறு | கோரைக் கிழங்கு |
| விளாமுச்சி வேர் | பூலாங்கிழங்கு |
| திராட்சை | செண்பக மொட்டு |
| பேரீச்சம்பழம் | ரோஜா மொட்டு |
| கடுக்காய் | வலம்புரி |
| மாசிக்காய் | இடம்புரி |
| நெல்லி முள்ளி | கஸ்தூரி மஞ்சள் |
| அச்சுவெல்லம் | விரளி மஞ்சள் |
| உருண்டை வெல்லம் | தாமரைக் கிழங்கு |
| கருப்பட்டி | தாமரைக் காய் |
| பனைவெல்லம் | சுக்கு |
| அவல் | அரிசிதிப்பிலி |
| நெற்பொரி | சித்திரத்தை |
| முப்புரிநூல் கண்டு | வெள்ளை மிளகு |
| தர்ப்பை | கிராம்பு |
| ஜாதிலிங்கம் | வெண்கடுகு |

கங்கா தீர்த்தம் முதலியன.

| | |
|---|---|
| யவைநெல் | நெல் |
| சாமைநெல் | நீவாரம் |
| மூங்கில் அரிசி | முத்தகாசு |
| தினை | பச்சைநெல் உமி |
| ஜடாமஞ்சு | மாவிலை |
| மட்டிப்பால் | திரிநூல்கள் |
| நெறி அரிசிபால் | சூரியகாந்தக் கண்ணாடி |
| அகுபாக்கு | மண்மடக்குகள் |
| வால்மிளகு | குடங்கள் |
| ஜாதிக்காய் | சொம்புகள் |
| ஜாதிபத்திரி | அர்க்கிய பாத்தரங்கள் |
| புனுகு | பஞ்ச பாத்திரங்கள் |
| ஜவ்வாது | உத்தரணி |
| கச்சோலம் | அட்சரத்தகடு |
| கஸ்தூரி | மாலைகள் |
| கோரோசனை | உதிரிப்பூக்கள் |
| அரகஜா | வில்வப் பத்திரம் |
| சந்தனாதிதைலம் | விளாபத்திரம் |
| தேன் | நொச்சிப் பத்திரம் |
| சர்க்கரை | மாவிலங்கு பத்திரம் |
| கற்கண்டு | கிளுவைப் பத்திரம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| காறாகருணை | பணிசெட்டுவகையறா |
| சேமங்கிழங்கு | வெட்டிவேர் |
| மலைப்பழம் | மருக்கொழுந்து |
| அன்னாசிப்பழம் | அறுகு |
| நாவல் | தாழம்பூ |
| பம்பிளிமாஸ் | நவக்கிக வஸ்திரங்கள் |
| பேயன்பழம் | சிவப்புத்துண்டு |
| ரஸ்தாளிப்பழம் | வெள்ளைத் துண்டு |
| மஞ்சள்துண்டு | தங்கநிற மஞ்சள் துண்டு |
| வெள்ளைத்துண்டு | கருப்புத்துண்டு |
| நீலநிறத் துண்டு | சித்ர வர்ணத் துண்டு |
| கணபதிக்கு – துண்டு | கும்பவஸ்திரம் (சுவாமி) |
| பூர்ணாஹுதிக்கு பட்டு | தேங்காய் உரித்தது |
| பூர்ணபலம் | கும்பவஸ்திரம் (அம்பாள்) |
| சுவாமி வேதிகை | (வஸ்திரம்) |
| ஆசார்ய வஸ்திரம் | வாஸ்து சாந்தி வஸ்திரம் |
| பரிசாராக வஸ்திரம் | அவிசு பாத்திரம் |
| (வெங்கப்பாணை) | ரக்ஷாபந்தனக் காப்பு |
| பொன்தகடு அச்சரம் | கூர்மாதி பிரதிமைகள் |
| ஸ்வர்ண பங்கஜம் | நீலோத்பலம் பவித்ரம் |
| பொன்ஊசிக்கம்பி | வெள்ளிக்கம்பி |

## தனலெட்சுமி பூஜை வகையறா

| | |
|---|---|
| ரவிக்கைத்துண்டு (சிகப்பு) | சீப்பு |
| கண்ணாடி | குங்குமச் சிமிழ் |
| பழங்கள் | சந்தனம் |
| தங்கக்காசு | |

## பூஜைகள்

| | |
|---|---|
| அனுக்ஞை | தேவதா அனுக்ஞை |
| விக்னேஸ்வர பூசை | புண்ணியாகவாசனம் |
| பஞ்சகவ்வியம் | வாஸ்துசாந்தி |
| மிருகத்சங்கிரஹணம் | அங்குரார்ப்பணம் |
| ரக்ஷாபந்தனம் | பிரசன்னாபிஷேகம் |
| கும்பஸ்தாபனம் | பிரதான கலசம் |
| வர்தினி கலசம் | ஸப்தவிம்சதி கும்பம் |
| அஷ்ட வித்யேஸ்வர கும்பம் | வினாயகர் யாகம் |
| வர்தினி பரிவாரக கலசம் | ஸப்தவிம்சதி கும்பம் |
| அட்வித்யேஸ்வர கும்பம் | வினாயகர் யாகம் |
| வர்த்தினி பரிவார கலசம் | நவக்கிரக யாகம் |
| ஸ்வர்ணபுஷ்பம் | ஸ்ருக் |
| ஸ்ருவம் | யத்ராதானம் |
| அபிஷேக தட்சணை | அஷ்டபந்தன மருந்து |
| சுவர்ண பந்தம் | ரஜபந்தனம் |
| மருந்துக்கு பசு வெண்ணெய் | யாகசாலை அமைத்தல் |

## அஷ்டமிர்திகை அபிஷேகம்

| | |
|---|---|
| சமுத்திர மண் | காவேரி மண் |
| யானையடி மண் | மண்புற்றுமண் |
| தர்ப்பை மூலமண் | நண்முவளை மண் |
| காளைமாட்டுக் குழம்பு மண் | புண்ணிய ஸ்தல மண் |
| கூர்மாஸனப்பலகை – (பிரதானம்) | ஆசன பலகைகள் |
| அஷ்ட மங்கலப் பலகைகள் | தசாயுத பலகைகள் |
| தோரணவாயில் | தீபஸ்தம்பம் (விளக்கு) |
| முக்காலி | ஸ்நானவேதிகை |
| மண்தோண்டிகள் | கடத்திற்கு முப்புரி நூற் கண்டுகள் |
| கலர்நூல் கண்டுகள் | மண்மடக்குகள் |
| பாலிகைகள் – 12 | |

## சமித்துகள்

| | |
|---|---|
| மா | பாதிரி |
| பலா | நெல்லி |
| அரசு | மூங்கில் |
| புரசு | அருகு |
| அத்தி | தர்ப்பை |
| வில்வம் | தர்ப்பைக்கயிறு |
| வன்னி | மோது |
| நாறுவி | பூசணிக்காய் |

## வாஸ்து சாந்திகள்

| | |
|---|---|
| மண்வெட்டி | உபநிடத கோஷ்டி |
| மூங்கில் தட்டுகள் | ஆகம கோஷ்டி |
| தாம்பாளங்கள் | புராண கோஷ்டி |
| வலம்ச் சங்கு | சாஸ்திர கோஷ்டி |
| வேஷ்டி துண்டு | திருமுறை கோஷ்டி |
| சுவர்ண புஷ்பம் | கோஷ்டிகளுக்கு வஸ்திரம் |
| சோடச சாமான்கள் | மற்றும் தட்சணைகள் |
| வேத கோஷ்டி | |

## விசேஷ யாக திரவியங்கள் - பலன்கள்

| | |
|---|---|
| பொரசு | – ப்ரஜாவிருத்தி |
| கருங்காலி | – விஜயம் |
| இத்தி (இச்சில்) | – சௌக்யம் |
| அத்தி | – போகம் |
| சந்தனம் | – சாந்தி |
| ஆல் | – ஆரோக்யம் |
| வன்னி | – வசியம் |
| வில்வம் | – இஷ்டசித்தி |
| வெள்ளெருக்கு | – ரோகநாசம் |
| நாயுருவி | – விஷநாசம் |
| மா | – ஐஸ்வர்யம் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச இந்துமத குருபீட ஆலோசனைக் கூட்டத்தில் பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள், சிவஸ்ரீ பா. ஷண்முகரெட்ணசர்மா, சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள், சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள், சிவஸ்ரீ க. சிவபாலக் குருக்கள், சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் உட்பட 116 குருமார்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி ஸ்ரீ ஐயப்ப தாஸக் குருக்கள் அவர்களின் 18வது ஆண்டு பீடாரோஹண விழாவில் பக்தர்கள் பீடத்தில் அமர்த்தி ஊர்வலமாக அழைத்து வரும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களுடன் லண்டன் சிவாச்சாரியார்களும் பக்தர்களும்.



லண்டன் முருகன் ஆலயத்தில் சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதிக்கு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நாகநாத சிவாச்சாரியார் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்துக் காளாஞ்சி வழங்குகிறார். அருகில் சர்வதேச இந்துமத குருபீட லண்டன் அமைப்பாளர் கலாநிதி சாம்பசிவ ஷண்முகநாத சிவாச்சாரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் - ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணர் ஆலயத்தில் நடைபெற்ற சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமி பூஜையி
இலங்கை, ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் தலைமையில் பஜனை நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் - ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் ஐயப்பன் பூஜை, பஜனை ஆன்மீக உரை நிகழ்த்திய ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்களுக்கு ஆலய தர்மகர்த்தாக்கள் சார்பில் இணுவில் சிவஸ்ரீ இராமநாத ஸ்ரீதரக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சாஸ்தா பீடத்தின் 18ஆவது ஆண்டு சபரிமலை புனித யாத்திரையின்போது இருமுடிகட்டும் பூஜை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் 18ஆவது ஆண்டு மகரஜோதி விழாவில் மஹிஷி சம்ஹாரம் (வேட்டைத் திருவிழா) நடைபெறும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பாதிரி | – | சந்ருக்ஷயம் |
| மூங்கில் | – | சாந்தி |
| பலா | – | கீர்த்தி |
| அறுகம்புல் | – | தரித்ரநாசம் |
| தர்ப்பை | – | ஞானசித்தி |
| நெய் | – | ரோகநாசம் |
| ஹவிஸ் (சுத்தான்னம்) | – | சுபவிருத்தி |
| பாலன்னம் | – | ஆயுள் |
| எள்ளன்னம் | – | பாபநாசம் |
| மிளகன்னம் | – | சத்ருநாசம் |
| தயிரன்னம் | – | ஆரோக்யம் |
| பருப்பன்னம் | – | வித்யாலாபம் |
| தேன்னனம் | – | சந்தோஷம் |
| கடுகு அன்னம் | – | பயநாசம் |
| தேங்காய் சாதம் | – | புஷ்டி |
| எலுமிச்சை சாதம் | – | வசியம் |
| பாயாசன்னம் | – | திருப்தி |
| உளுத்தன்னம் | – | க்ரோசசணம் |
| வெண்கடுகு | – | க்ரோதசனம் |
| உளுந்து | – | பசுவிருத்தி |
| நெல்பொரி | – | சாயுஜ்யம் |
| சத்துமாவு (ரிபுநாகம்) | – | கடன் நீக்கம் |
| பால் | – | சௌபாக்கியம் |
| தயிர் | – | சுகம் |
| வெல்லம் | – | செல்வப் பேறு |
| வாழைப்பழம் | – | துக்கநாசம் |
| மாம்பழம் | – | ரோகநிவர்த்தி |
| பலாப்பழம் | – | சுபம் |
| விளாம்பழம் | – | புத்ரலாபம் |
| மாதுளம்பழம் | – | புத்ரலாபம் |
| பேரிச்சம்பழம் | – | வலிமை |
| நாரத்தம்பழம் | – | சோநாசம் |
| எலுமிச்சம்பழம் | – | வசியம் |
| திராட்சைப் பழம் | – | இஷ்டசித்தி |
| தேங்காய் | – | சர்வானுகூலம் |
| பயறு | – | ஆயுள் |
| கொண்டக்கலை | – | சிரேயசு |
| கோதுமை | – | ஸாதிகாரம் |
| குளச்சல்நெல் | – | வீர்யம் |
| யவைநெல் | – | இராஜவசியம் |
| மூங்கில் அரிசி | – | தேக காந்தி |
| கொள்ளு | – | தேகபலம் |
| கருமொச்சை | – | வம்சவிருத்தி |
| துவரை | – | வீர்யம் |
| தினை | – | இஷ்டசித்தி |

| | | |
|---|---|---|
| வெள்ளைஎள் | – | சோகநாசம் |
| அவரை | – | பந்துலாபம் |
| நெல் | – | சுபிட்சம் |
| பொற்சம்பா நெல் | | |
| செம்பாளை நெல் | | |
| வால் நெல் | | |
| வெள்ளை சம்பா நெல் | | |
| சிவப்பு சம்பா நெல் | | |
| புனுகு சம்பா நெல் | | |
| பெருஞ்சம்பா நெல் | | |
| செம்பவள நெருப்பு | | |
| பன்றி நெல் | | |
| கூர் நெல் | | |
| முத்துச் சம்பா நெல் | | |
| சாமை | – | மழை |
| வரகு | – | மலநாசம் |
| கரும்பு | – | பிராணிசுகம் |
| வெள்ளரிக்காய் | – | விருத்தி |
| தேன் | – | சந்தோஷம் |
| சர்க்கரை | – | சத்ருநாசம் |
| அவல் | – | இஷ்டசித்தி |
| லட்டுகம் (இட்லி) | – | சுபிட்சம் |
| மாஷாபூகம் | – | யட்சு |
| அப்பம் | – | சந்தோஷம் |
| நீர்க்கொழுக்கட்டை | – | இஷ்டசித்தி |
| திலாபூபம் (எள் கொழுக்கட்டை) | – | பாபநாகம் |
| தில கண்டம் (எள் உருண்டை) | – | ஆயுள் |
| மோதகம் | – | ஆனந்தம் |
| அகில் | – | வலிமை |
| தேவதாரு | – | சுகம் |
| வெண்மொச்சை | – | சௌந்தர்யம் |
| கிழங்குகள் | – | பூமிலாபம் |
| வெட்டிவேர் | – | லாபம் |
| விலாமிச்சை வேர் | – | மோகம் |
| மருக்கொழுந்து | – | விருத்தி |
| குங்குலியம் | – | சாதுர்யம் |
| சிற்றேனம் | – | ப்ரீதி |
| கிராம்பு | – | பயநாசம் |
| ஜாதிக்காய் | – | விரோதசமனம் |
| ஜாதிபத்திரி | – | அனுகூலம் |
| பன்னீர் | – | பிரியம் |
| குங்குமப்பூ | – | ப்ரீதி |
| பச்சைக் கற்பூரம் | – | ப்ரீதி |
| சந்தனக்கட்டை | – | ப்ரீதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்தூரி – ப்ரீதி
புனுகு – ப்ரீதி
கோரோஜனை – ப்ரீதி
செஞ்சந்தனம் – ப்ரீதி
தாமரை முதலான
புஷ்பங்கள் – செல்வம்
பத்திரங்கள் (தளிர்கள்) – ஆரோக்யம்
வில்வம் – பாபநாசம்
நீலாத்பலம் – அருள்
வாசனைத் திரவியங்களுடன்
கூடிய தாம்பூலம் – இஷ்டசித்தி

## அபிஷேகப் பலன்

கந்த தைலம் – இன்பம்
மாப்பொடி – கடன்திரும்
மஞ்சட்பொடி – அரசுவசீயம்
நெல்லிப் பருப்புப் பொடி – பிணிநீக்கம்
திருமஞ்சனத் திரவியம் – பிணிநீக்கம்
பஞ்சகவ்யம் – சுத்தம், கலபாபநீக்கம்
பஞ்சாமிர்தம் – முக்தி
பழ பஞ்சாமிர்தம் – முக்தி
பால் – ஆயுள் விருத்தி
தயிர் – ப்ராஜா விருத்தி (குழந்தைப்பேறு)
நெய், இளவெந்நீர் – முக்தி
தேன் – சுகம், சங்கீத குரல் வளம்
இளநீர் – இராஜபோகம்
சர்க்கரைச் சாறு – சத்ர நாசம்
கரும்புச் சாறு – ஆரோக்கியம்
தமரத்தம் பழச்சாறு – மகிழ்ச்சி
எலுமிச்சம் பழச்சாறு – பயமபயம் போக்கும்
நாரத்தம் பழச்சாறு – மந்திர சித்தி
கொழஞ்சிப் பழச்சாறு – சோகம் போக்கும்
மாதுளம் பழச்சாறு – பகைமை அகற்றல்
அன்னாபிஷேகம் – விளைநிலங்கள் நலந்தரும்
வில்வோதகம் (லவம் கலந்த நீர் – மகப்பேறு
குசோதகம் (தருப்பை கலந்த நீர்) – ஞானம்
பன்னீர் – குளிர்ச்சி

விபூதி – சகல ஐஸ்வரியம்
ஸ்வர்ணோதகம் – சகல சௌபாக்யம்
ரத்னோதகம்
(ரத்னம் கலந்த நீர்) – ஞானம்
பன்னீர் – குளிர்ச்சி

விபூதி – சகல ஐஸ்வரியம்
ஸ்வர்ணோதயம் – சகல சௌபாக்யம்
ரத்னோதகம்
(ரத்னம் கலந்த நீர்) – அரசாட்சி, பெருஞ்செல்வம்
கோரோசனை – சகல ஆரோக்யம் மிக்க புகழ்
சகஸ்ரதாரை – சகல ஆரோக்யம் மிக்க புகழ்
ஜவ்வாது – சகல ஆரோக்யம் மிக்க புகழ்
புனுகு – சகல ஆரோக்யம் மிக்க புகழ்
குங்குமப்பூ – சகல ஆரோக்யம் மிக்க புகழ்
சங்காபிஷேகம் – சகலபாபாரிஷ்டம்
ஸ்நப கும்பாபிஷேகம் – சித்த சுத்தியடைந்து சிவ தரிசனம்

ஒவ்வொரு அபிஷேகத்தின் பின் வடிகட்டிய சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்யப் பரம சாந்தம் உண்டாகும்.

*கும்பாபிஷேகம் தரிசித்து என்றும் இன்புறுக!*
*குருமூர்த்திகள் தரிசித்து குருவருள் பெற்றுஅமைக!!*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப் பிறவியின் உயர் நோக்கத்தை நிறைவு செய்கின்றன

*குமாரசாமி சோமசுந்தரம்*

ஆலயம் ஆண்டவனின் சந்நிதியாகும். இறைவனின் ஆலயம் ஆன்மீகத்தை விளங்க வைக்கிறது. ஆன்மீகம் மனித வாழ்க்கையுடன் கலக்கும் போதே வாழ்க்கை செழுமையும் சீரும் பெறுகிறது. இதனாலேயே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", என்றும் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் ஆன்றோர்கள் கூறி,வைத்துள்ளனர்.

சைவப் பண்பாட்டின் சிகரமாகத் திருக் கோயில்கள் திகழ்கின்றன. கோயில் என்றால் இறைவன் உறையும் இல்லம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

இறைவன் உயிர்க்கு உயிரானவன். எம்மை யெல்லாம் படைத்துக், காத்து அருள்பாலிப்பவன். இப்பிரபஞ்சம் முழுவதற்கும் கருத்தாவாக உள்ளவன். எங்கள் யாவரினதும் ஒப்பற்ற தலைவன் அவன். எம் இறைவன் திருவருட் சக்தியோடு கூடியிருப்பதால், "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்கிறார் உமாபதிசிவம்.

சைவம் சிவ சம்பந்தமுடையது. சிவம், சக்தி சம்பந்தமுடையது. சிவம் இன்றேல் சக்தி இல்லை; சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவசக்தி இணைப்பு, சைவத்தின் சிறப்பு இதனை விளக்குவது அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் "அம்மையே அப்பா" எனத் தீர்க்கமாகக் கூறுகிறார் மணிவாசகப் பெருமான். சிவபெருமானைத் "தோடுடைய செவியன்" ஆகவே திருஞானசம்பந்தர் தரிசிதுள்ளார். கண்டதைக் கண்டபடி, உள்ளதை உள்ளபடி சொல்லும் இயல்பு மூன்று வயதுக் குழந்தையுடையது. தோடு, பெண்கள் அணியும் ஆபரணம், குண்டலம் ஆண்கள் காதில் அணியும் ஆபரணம் என்பது கவனிக்கத்தக்கது.

ஆலயங்கள், ஆகமங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகளை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப் படுகின்றன. நித்திய, நைமித்தியக் கிரியைகள், வழிபாடுகள் என்பனவும் ஆகம விதிப்படியே நடத்தப் படுகின்றன. தெய்வ சான்னித்தியம் ஆலயங்களில் பேணப்படுவதற்கு இவையே அனுசரணையாக உள்ளன.

ஆலயங்கள், தனிமனித நல்வாழ்விற்கும், நாட்டின் வளம் மற்றும் ஆட்சி மேம்பாட்டிற்கும், உலகத்தவர் நன்மைக்கும், பண்பாட்டு ஒழுக்க வளர்ச்சிக்கும், சமூக, கலை கலாச்சார விருத்திக்கும் நிலைக்களனாக விளங்கி விருகின்றன. ஆன்மீகப் பண்பாட்டின் ஊற்றுக்கண் ஆலயங்களேயாகும்.

## ஆலயம் ஏன்?

அண்டங்கள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து, எல்லாவிடமும் வியாபகமாய் உள்ள பரம்பொருளுக்கு, நான்கு பக்கங்களிலும் எல்லைகள் வகுத்து, சுவர்கள் அமைத்து ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் கோயில் நிறுவி, அதனையே இறைவனின் இல்லமாகக் கொள்ளுதல் எவ்வாறு அறிவிற்குப் பொருந்தக் கூடியதாகும் என வினா எழுப்புகிறார்கள் சிலர். அவர்களுக்குத் தக்க பதில் அளிக்க வேண்டியது நம் கடமையாகும்.

கடவுள் என்னும் பதத்தின் பொருளை நாம் அறிந்த கொள்ளுதல் வேண்டும். மனம், வாக்கு, காயம் என்பவற்றிற்கு எட்டாததும் அவற்றின் எல்லையைக் கடந்தும் அவற்றிற்கு எட்டாததும் அவற்றின் எல்லையைக் கடந்தும் அவற்றிற்கு உள்ளும் நிற்கும் பொருள் என்பதால் அப்பொருள் கடவுள் எனப்படுகிறது. அவ்வாறிருந்தும் கடவுள் எவர் கண்ணிற்கும் புலப்படக்கூடிய பொருள் அன்று. அதுவே கடவுளின் இயல்புமாகும். கடவுளின் சுய நிலை அருவம் அதாவது உருவற்றது, உரையற்றது, குணங்குறிகள் அற்றது, நாமமற்றது.

அருவமாக எங்கும் எதிலும் நிறைந்துள்ள கடவுளை தியானிக்கவோ, அதனுடன் உறவு கொள்ளவோ பேசவோ, ஞானிகளுக்கு மட்டுமே இயலும். எம்மில் மிகப் பெரும்பான்மையினர் ஞானிகள் அல்லர். நாம் சிற்றறிவும் சிதறிய எண்ணங்களும் உடையவர்கள். ஒரு கணமேனும் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறன் அற்றவர்கள். அந்த வகையில் நாம் கடவுளுடன் பேசுதல் செய்ய வேண்டுமாயினுஞ் சரி, கடவுளை வேண்டுதல் செய்யினுஞ் சரி, ஏன் கடவுளை நினைப்பதற்கும் தியானிப்பதற்கும் கூட நமக்கு எம் முன்னால் ஒன்றை உருவமாக முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு மலையைப் பற்றிய எண்ணக்கருவை ஏற்படுத்துவதற்கு, ஒன்றில் மலையை நேரடியாகக் காண்பிக்க வேண்டும் அல்லது மலையின் மாதிரி உரு ஒன்றைக் காட்ட வேண்டும். முதிர்ச்சி குறைந்த பிள்ளைகள் தூலமாக ஒரு பொருளைப் பார்க்காமல், அது பற்றிய விளக்கத்தைப் பெற மாட்டார்கள். ஒன்றை விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு நேரடி அனுபவம் தேவையாகும். அவ்வாறே, சாதாரண மக்களுக்கும் கடவுளை அருவமாகத் தியானிப்பதற்கோ அருவ நிலையிலான கடவுளுடன் பேசுவதற்கோ சிரமமாக உள்ளது. இந்த நிலையில் ஒன்றில் உருவம் தேவைப்படுகின்றது. அன்றேல் உருவத்தின் சாயல் வேண்டப்படுகிறது. இவற்றுள் ஒன்றையேனும் முன்னிலைப்படுத்தாமல், சாதாரண மக்களுக்குக் கடவுள் பற்றிச் சிந்திக்கவோ, தியானிக்கவோ, அல்லது கடவுளுடன் பேசவோ, உறவாடவோ இயலாமற் போய்விடுகிறது. சிவாகமங்களின் தோற்றம், எமக்கு எந்த வகையில் இப்பரிசோதனையைத் தீர்ப்பதற்கு உதவிற்று என்பது சிந்திக்கற்பாலது.

ஆலயங்களை அமைப்பதற்கும், தேவப் பிரதிட்டைக்கும், நித்திய நைமித்தியக் கிரிகைகள், வழிபாடுகள் மூலம் தெய்வ சான்னித்தியத்தை ஏற்படுத்துவதற்கும் சிவாகமங்களே வழி வகுத்தன. உருவ வழிபாட்டை அதிகார பூர்வமாக்கிய பெருமை ஆகமங்களைச் சாரும். கடவுளை உருவமாக முன்னிலைப்படுத்தித் தியானிக்கவும், வழிபடவும், கடவுளுடன் பேசவும், உறவாடவும் சாதாரண மக்களுக்கு இயலுவதாயிற்று. ஆலயங்கள் ஏன், என்பதற்கு இப்பொழுது விடை கிடைத்துள்ளதல்லவா.

## ஆலயத்தில் அமைதியும் தூய்மையும்

அமைதி, தூய்மை ஆகிய இரண்டும் தெய்வீகம் பொருந்தியவை. அவை ஆலயத்திற்கு சான்னித்தியத்தை ஏற்படுத்துபவை. அதனால் ஆலயத்தில் அமைதியையும், தூய்மையையும் நிலவச் செய்ய வேண்டியது வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்களின் கடமையும் பொறுப்புமாகும். "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என மெய்கண்டார் நமக்கு அறிவிக்கின்றார். ஆலயத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு அங்கமும் தொழுது வணங்குவதற்குரியவை. வணக்கத்திற்குரிய இடம் தூய்மையாக வைத்திருத்தலும், ஆங்கு அமைதி பேணப்படுதலும் அவசியமாகும்.

ஆலயங்களில் இறை சிந்தனையோடு மனதை ஒருமுகப்படுத்தி வழிபாடு செய்தற்கு ஆலச் சூழலில் அமைதி இருக்க வேண்டியது முதல் நிபந்தனையாகும். கவனக் கலைப்பாண்கள் காணப்படின், மன அடக்கம், புலன் அடக்கம் இரண்டுமே கலைந்துவிடும்.

ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யும் முறை, மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் எல்லாமே சைவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அங்கு அவர்களில் பெரும்பாலானோர் நடந்து கொள்ளும் விதம், அவை யாவற்றையும் மீறுவதாகவே காணப்படுகிறது. தெரிந்து கொண்டு செய்யும் குற்றங்கள் மகா பாவம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய பாவங்களுக்கு விமோசனம் கிடையாது. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளுதலுக்கு இது சமமாகும்.

கோயிலுக்குள், கோபுர வாயிலினூடாகவே செல்லுதல் வேண்டும். அவ்விடத்தில் சிலர் கூடி நின்று பேசிக் கொண்டும், வீண் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டும் ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்துக் கெண்டும் இருந்தால், பிறருக்கு இடையூறுகளை விளைவித்தவர்கள் ஆகின்றனர். அத்துடன் அமைதிக்குப் பங்கமும் ஏற்படுகின்றது. இதைப் பலர் சிந்திப்பதில்லை.

அமைதி தேடி ஆண்டவன் சந்நிதிக்கு வந்தும் அங்கேயும் அமைதி இல்லையென்றால், வேறெங்குதான் அமைதியைக் காணமுடியும். இவ்வாறு கேட்டு எத்தனையோ அடியார்கள் கவலை கொள்கிறார்கள்.

சில கோயில்களின் உட்பிரகாரங்களில் ஒலி பெருக்கிகளை அமைத்து அடிக்கடி ஒலிபரப்புகின்றனர். பக்திப் பாடல்கள் என்ற பெயரால் ஒலிகளை உரக்கக் கிளப்புகின்றனர். இத்துணை சத்தங்கள், இரச்சல்களின் மத்தியில் மனத்தை ஒருமுகப்படுத்தி, இறைவனை வழிபாடு செய்வதென்பது எப்படிச் சாத்தியமாகும்.

அமைதி, சாந்தி, நிம்மதி – இவைதான் இன்று எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுபவை. இவை வீட்டில் இல்லை, வேலைத் தலத்தில் இல்லை, வாழும் சமூகத்தில் இல்லை. ஏன் நாட்டிலும் இல்லை இவற்றை ஆலயங்களில் அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.

அமைதி பேணல்; தூய்மை பேணல்; வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல்; பிறருக்கு இடையூறுகள் தொல்லைகளை ஏற்படுத்தாதிருத்தல்; ஆண்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உறுதிப் படுத்துதல் என்பனவற்றின் மூலம், திருவருட் துணைகொண்டு திருக்கோயில்களில் தெய்வ சான்னித்தியம் நிலைபெறச் செய்தல் வேண்டும்.

## செய்யத் தகாதன

திருக்கோயில்கள் ஆகம விதிப்படி அமைக்கப் பட்டு, நித்திய நைமித்தியகங்கள் நடத்தப்பெற்று வருகின்றன. கும்பாபிஷேகம் மூலம் தெய்வ விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்று தெய்வ சான்னித்தியம் நிலவ வழி செய்யப்படுகிறது. அத்தகைய திருக்கோயில்களில் ஆகமங்களில் விதிக்கப் பெற்றிருப்பவற்றிற்கு புறம்பாக எதுவும் நடைபெறக் கூடாது, நடைபெற அனுமதித்தலும் ஆகாது.

சுவாமி விக்கிரகங்களைச் சிவாச்சாரியார்கள், அர்ச்சகர்கள் என்போரைத் தவிர வேறெவரும் தீண்டுதல் ஆகாது என்பது விதி. ஆனால், வழிபடுவோர் சிலர் விக்கிரகங்களைத் தொட்டு தீண்டுவதையும், கைகளால் அளைவதையும் காண்கிறோம். வேறு சிலர் பூக்களைக் கொண்டு வந்து வீசி எறிகிறார்கள். சிவாச்சாரியார் பூசை செய்யும்போதும், வழிபடுவோர் மலர்களையும் பத்திரங்களையும் விக்கிரகங்கள் மீது தாமும் போடுகிறார்கள். சிலர் கோயில் மணிகளை தாம் நினைத்த நேரங்களில் அடித்துவிட்டுச் செல்கிறார்கள். சுவாமி திருஉலா வருவதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், ஊர்திகள், பல்லக்குகள் என்பவறன் மீது சிலர் ஏறி உட்காருகின்றார்கள். பிள்ளைகளை அவற்றின் மீது இருத்திப் புகைப்படங்களும் எடுகிறார்கள். இவை யாவும் இன்றைய புதுக் குழப்பங்கள். இவ்வாறு சிலர் செய்வதைப் பார்த்து விட்டு பலர் செய்ய முற்படுகிறார்கள்.

விபூதிப் பிரசாதங்களை அலட்சியமாக வாங்கி நிலத்தில் சிந்தியும் விடுகிறார்கள்; சுவர்கள், தூண்கள், வாகனங்கள் என்பவற்றில் பூசியும் விடுகிறார்கள். பூக்கள், பத்திரங்கள், வில்வங்களைக் கீழே போட்டு விடுவதால் பிறர் கால்களால் அவை மிதிக்கப்பட்டு விடுகின்றன. பழங்களை உண்டுவிட்டு அவற்றின் தோல்களை ஆங்காங்கு போட்டு விடுவதால் பிரகாரங்களில் அசுத்தம் ஏற்படுகின்றது. இவை யாவும் பாவச் செயல்களாகும்.

விபூதிப் பிரசாதங்களை இரண்டு கைகளாலும் சிவாச்சாரியாரிடம் பணிந்து வாங்கிப் பின் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி நெற்றியில் அணிதல் வேண்டும். நெற்றியை நீட்டி விபூதியை அணிந்து விடும்படி சிவாச்சாரியாரைக் கேட்பது முறையன்று. தீர்த்தத்தை இருகைகளாலும் வாங்கிப் பருகுதல் வேண்டும். தீர்த்தத்தை வாங்கித் தலையிலே பூசிக் கொள்ளலாகாது. சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும் போது கோமுகியில் வடிந்து வரும் நீரைச் சிலர் எடுத்துத் தீர்த்தமாகப் பருகுகிறார்கள். அதுவும் முறையன்று.

கூந்தலை விரித்து விடுதல், மூக்கு நீர் சிந்துதல், எச்சில் துப்புதல், காறி உமிழ்தல், தும்முதல், இருமுதல் என்பவற்றையும் ஆலயங்களில் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஆசௌசம் உள்ளவர்களும், வீட்டுக்கு விலக்கானவர்களும், மரணக்கிரியைகள் கலந்து விட்டும் ஆலயத்திற்குள் செல்லுதல் ஆகாது. இவை யாவும் பாவச்செயல்கள் ஆகும். இச்செயல்களால் தெய்வ சான்னித்தியம் பாதிப்படைகின்றது.

## பிரார்த்தனை

சைவ சமயிகள் கடவுள் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள். ஆலயங்களிலும் வீடுகளிலும் பிரார்த்தனைகளைச் செய்யும் வழக்கமே பொதுவாக உள்ளது. பிரார்த்தனைக்கு நேரம், இடம் என்பன இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகவே, நின்றும், இருந்தும், நடந்தம், கிடந்தும் என்றும் இவ்விடத்திலும் "அவன் தாள் நினை" என்று பெரியோர் நமக்கு அறிவுரை பகன்றுள்ளார்கள். இறைவனுடன் நாம் கொள்கின்ற தொடர்பு பிரார்த்தனையாகும்.

பிரார்த்தனைகள், கடவுட் சிந்தனையைப் பிரார்த்திப்பவர்களின் மனங்களில் நிறைக்கின்றன. அதனால் மனத் தூய்மை, மொழித்தூய்மை, செயற்தூய்மை என்பன ஏற்படுகின்றன. அப்படி யானவர்களின் வாழ்க்கையும் தூய்மை கெட்டு விடுகின்றது. வாழ்க்கையில் தூய்மை ஏற்பட்டு விட்டால் அவர்கள் எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்தப் பெறுவர். தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகள் கிட்டுகின்றன.

பிரார்த்தனைகள், காமியம், நிஸ்காமியம் என இரண்டு வகைகளாக உள்ளன. பயனை எதிர்பார்த்துச் செய்யப்படும் பிரார்த்தனை, காமியம் எனவும், அவ்வாறு பயனை எதிர்பார்க்காது செய்வது நிஸ்காமியம் என்றும் அழைக்கப்படுகின்றன. பிரார்த்தனைக்கு மன ஒருமைப்பாடும் பக்தியும் முக்கியம். இறைவன் மீது கொள்கின்ற அன்பே பக்தியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான பக்தி என்பது இறைவனிடம் எந்த ஒன்றையும் கேட்காது, அவனைப் பிரார்த்திப்பதும், அவனுக்குப் பணிந்து நடத்தலும் அவன் எமக்குத் தருபவற்றை மனமார ஏற்று மகிழ்வதுமேயாகும். பிரார்த்தனையின் அதி உச்சநிலை, இறைவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்து விடுதலேயாகும். பூரண சரணாகதி என்பது இதனையேயாகும்.

கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், எமது தேவைகளையும் விருப்பங்களையும் கடவுள் அறிவார். ஆயினும் எம்மில் பலர் உலகியல் ஆசைகளையெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டியே பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றோம். எம்முடைய வேண்டுதல்கள் நிறைவேறாதவிடத்துக் கடவுளை வைது தீர்க்கிறோம். இவ்வாறு நடந்து கொள்ளுதல் பிரார்த்தனையை கொச்சைப்படுத்துவதாக அமையும். எனவே, பிரார்த்தனை செய்தல் எமது பணி ; மிகுதியைக் கடவுள் பார்த்துக்கொள்வர். "என் கடன் பணி செய்து கிடப்பதே"; "இறைவன் கடன் என்னைத் தாங்குதல்" என்கிறார் அப்பரடிகள்.

பிரார்த்தனையை நாம் ஓர் ஆன்மீகப் பயிற்சியாகக் கொள்ளுதலே முறையாகும். ஆலய தரிசனம், நாமசங்கீர்த்தனம், கூட்டுவழிபாடு, தியானம், ஜெபம், விரதமனுட்டித்தல், தேவார திருவாசக பாராயணம், பூசை வழிபாடு, சைவ ஒழுக்க வாழ்வு என்பன பிரார்த்தனையின் அங்கங்கள் ஆகும். "பொன் வேண்டேன், பொருள் வேண்டேன் உன் திருவருள் தான் வேண்டும்" என்கிறார் ஓர் அருளாளர். மனம், மொழி, மெய்த்தூய்மையுடன் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும். அதே வேளை பிரார்த்தனைகள் நம்மை மேலும் தூய்மை யுடையோராக்குகின்றன.

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதல் என்கிறார் நாவலர் பெருமான். ஆலயமும் பிரார்த்தனையும் இவ்வுயர் நோக்கத்தை நாம் அடையப் பெறுதலுக்கு உறுதுணையாக விளங்கு கின்றன என்பதை உணர்வோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ''சந்ததியை வாழ வைக்கும் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவம்''

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"
ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார், J.P.

"ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:"

தனது கர்மாவினால் பகவானை அர்ச்சிக்கும் மனிதன் ஸித்தியடைகின்றான் என கீதையில் பகவான் கிருஷ்ண பரமாத்வா கூறியுள்ளார்.

தனது வாழ்வில் அனைத்துக் கர்மாக்களையும் நிறைவுசெய்து ஷஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் முதலிய மங்கள வைபவங்கள் தர்மத்தைப் போதிக்கும் சிறப்புப் பெற்றவை என சனாதன தர்மம் போற்றுகிறது.

கவிகுலதிலகமான மஹாகவி காளிதாஸர் ரகுவம்ச காவியத்தில்......

"அப்யர்த்த காமௌ தஸ்யாஸ்தாம்
தர்ம ஏவமநிஷிண:"

அறிவுள்ள அரசனுக்கு அர்த்தமும் காமமும்கூட தர்மமாகவே அமைந்திருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சமூகமும் தனிப்பட்டவரும் முன்னேற வேண்டுமானால் காலம் தவறாது கர்மாக்களைச் செய்ய வேண்டும். செய்கின்ற கர்மாக்களைச் சிரத்தையுடனும் மந்திர அர்த்தங்களை உணர்ந்தும் அனுஷ்டிக்க வேண்டும்.

"யதேவ வித்யயா கரோதி ச்ரத்தயா உபநிஷதா
தவேத வீர்யவத்தரம் பவதி"

எந்தக் கர்மாவை நன்கு அர்த்தம் அறிந்து அனுஷ்டிக்கின்றோமோ அந்தக் கர்மாவிற்கு அதிக பலனுண்டு என சாந்தோக்ய உபநிடதம் வர்ணிக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தமது வாழ்வில் தேவர்களுக்கு, பிதிர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், அதிதி பூஜை, பதிவ்ரதா தர்மம், கோஸம்ரக்ஷணம் இவைகளைத் தனது தலையாய கடமையாகச் செய்ய வேண்டும். இதனை வள்ளுவப்பெருமான் திருக்குறளில்.......

*"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்று துணை"*

எனக் குறிப்பிட்டுள்ளார். நடைமுறை வாழ்வில் தாய் – தந்தையர்கள் தமது பிள்ளைகளுக்கு வயது வந்ததும் திருமணம் நடாத்தி மகிழ்வதோடு தமது கடமையையும் நிறைவு செய்கிறார்கள். ஆனால் பிள்ளைகள் தமது தாய்–தந்யைருக்கு அறுபது வயது கல்யாணத்தை நடாத்திவைத்து மகிழ்ச்சியடைவதோடு தமது கடமையையும் செய்து வைக்கும் நிகழ்வு ஷஷ்டியப்த பூர்த்தி எனும் சிறப்புமிக்க சாந்தி வைபவமாகும்.

இவ்வாறு சிறப்புப்பெற்ற அறுபதாவது வயதில் ஷஷ்டி பூர்த்தி சாந்தி வைபவத்தைக் காணும் பாக்யம் எல்லாத் தம்பதிகளுக்கும் கிடைப்பதில்லை. அதேபோல தாய்–தந்தையர்க்கு அறுபதாவது வயதில் இந்த மங்கள வைபவத்தை நடாத்தி வைத்து ஆனந்தம் அடையும் பாக்யம் எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுத்து வைப்பதில்லை.

இவ்வாறு ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவம் காணும் தம்பதிகளும், இதனை நடாத்தி வைக்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரும் இறை அருளைப் பரிபூரணமாகப் பெற்றவர்கள். மிகவும் பாக்யசாலிகள் என்றே வேதம் குறிப்பிடுகிறது.

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவம் சௌநகர், போதாயனராலும், சிவாகமத்தினாலும் மூன்று வகையாக வர்ணிக்கப்படுகின்றது என சாந்திரத்னாகரம் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி'' எனும் மங்கள வைபவத்திற்கு எத்தனை கலசங்கள் (கும்பங்கள்) வைத்து செய்ய வேண்டுமென பலர் வினவுகிறார்கள்.

இது பற்றிய ஆகம விளக்கங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| உத்தமம் | – | 277 | கலசங்கள் வைத்துச் செய்வது |
| மத்திமம் | – | 138 | கலசங்கள் வைத்துச் செய்வது |
| அதமம் | – | 94 | கலசங்கள் வைத்துச்செய்வது |

இவ்வாறு செய்வதற்கு வசதி, வாய்ப்பு இல்லாதவர்கள் 60 கலசங்கள், 34 கலசங்கள், 26 கலசங்கள் வைத்துச் செய்யலாமென சௌநகர் குறிப்பிட்டுள்ளார். விஷேச தீட்சை, நிர்வாண தீட்சை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசார்யபிஷேகம் செய்யப்பெற்றவர்கள் குறைந்த மத்திம பக்ஷமாக 138 கலசங்களாவது வைத்துச் செய்ய வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

உத்தம பக்ஷமான 277 கலங்கள் பற்றிய மூர்த்திகளும் - கலசங்களின் எண்ணிக்கையும்

| | |
|---|---|
| 1. உக்ராத மிருத்யுவிற்கு | – 1 கலசம் |
| 2. உக்ர அதி தேவதைக்கு | – 1 கலசம் |
| 3. உக்ர பிரத்யதி தேவதைக்கு | – 1 கலசம் |
| 4. ஏழு சிரஞ்ஜீவிகளுக்கு | – 7 கலசங்கள் |
| 5. அறுபது வருஷங்களுக்கு | – 60 கலசங்கள் |
| 6. தக்ஷிணாயநண தேவதைக்கு | – 1 கலசம் |
| 7. உத்தராயண தேவதைக்கு | – 1 கலசம் |
| 8. ஆறு ருதுக்களுக்கு | – 6 கலசங்கள் |
| 9. 12 மாதங்களுக்கு | – 12 கலசங்கள் |
| 10. 12 ராசிகளுக்கு | – 12 கலசங்கள் |
| 11. சுக்ல, கிருஷ்ணபக்ஷ தேவதைகளுக்கு | – 2 கலசங்கள் |
| 12. 15திதி தேவதைகளுக்கு | – 15 கலசங்கள் |
| 13. ஏழு வார தேவதைகளுக்கு | – 7கலசங்கள் |
| 14. 27 நக்ஷத்திரத்துடன் வேதம் கூறும் அபிஜித் நக்ஷத்திரம் | – 28 கலசங்கள் |
| 15. சப்த ரிஷிகளுக்கு | – 7கலசங்கள் |
| 16. அஷ்ட வசுக்களுக்கு | – 8கலசங்கள் |
| 17. ஏகாதச ருத்திரர்களுக்கு | – 11 கலசங்கள் |
| 18. துவாதச ஆதித்யர்களுக்கு | – 12 கலசங்கள் |
| 19. யோகங்களின் தேவதைகளுக்கு | – 27கலசங்கள் |
| 20. கரணங்களின் தேவதைகளுக்கு | – 11 கலசங்கள் |
| 21. நவ துர்க்கைகளுக்கு | – 9 கலசங்கள் |
| 22. நவக்கிரகங்களுக்கு | – 9 கலசங்கள் |
| 23. அஷ்ட திக்பாலகர்களுக்கு | – 8 கலசங்கள் |
| 24. சப்த மருந்துக்களுக்கு | – 7 கலசங்கள் |
| 25. நான்கு திக்கில் உள்ள வருணர்களுக்கு | – 4 கலசங்கள் |
| 26.பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், விக்னேஸ்வரர் | – 4 கலசங்கள் |
| 27 க்ஷேத்திரபாலர், அபயங்கரர் வாஸ்த்து | – 3 கலசங்கள் |
| 28. மிருத்யுஞ்ஜயர், ஆகாசம், பூமி | – 3 கலசங்கள் |
| மொத்த கலசங்களின் எண்ணிக்கை 277 கலசங்கள் | |

மத்திய பக்ஷமான 138 கலசங்களின் விபரம்

| | |
|---|---|
| உக்ரரத மிருத்யு | – 1 கலசம் |
| அதிதேவதை | – 1 கலசம் |
| பிரத்யதி தேவதை | – 1 கலசம் |
| 60 வருடங்கள் | – 60 கலசங்கள் |
| சிரஞ்ஜீவி | – 7 கலசங்கள் |
| அயனம் இரண்டு | – 2 கலசங்கள் |
| மருதுக்கள் | – 6 கலசங்கள் |
| 12 மாதங்கள் | – 12 கலசங்கள் |
| ராசிகளுக்கு | – 1 கலசம் |
| பக்ஷ தேவதைக்கு | – 2 கலசங்கள் |
| திதி தேவதைக்கு | – 1 கலசம் |
| வார தேவதைக்கு | – 1 கலசம் |
| நக்ஷத்திர தேவதைக்கு | – 1 கலசம் |
| ரிஷிகளுக்கு | – 7 கலசங்கள் |
| வசுக்களுக்கு | – 1 கலசம் |
| ஏகாதச ருத்திரருக்கு | – 1 கலசம் |
| ஆதித்யர்களுக்கு | – 1 கலசம் |
| யோக தேவதைக்கு | – 1 கலசம் |
| கண தேவதைக்கு | – 1 கலசம் |
| துர்க்கைக்கு | – 1 கலசம் |
| நவக்கிரகங்களுக்கு | – 9 கலசங்கள் |
| திக்பாலருக்கு | – 8 கலசங்கள் |
| ம்ருத்துக்களுக்கு | – 1 கலசம் |
| நான்கு வருணர்களுக்கு | – 1 கலசம் |
| பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், விக்னேஸ்வரர் | – 4 கலசம் |
| க்ஷேத்திரபாலகர், அபயங்கரர், வாஸ்து | – 3 கலசம் |
| மிருத்யுஞ்ஜயர், ஆகாசம், பூமி | – 3 கலசம் |
| மொத்தம் | 138 கலசங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதம பக்ஷமான 94 கலசங்களின் விபரம்

| | |
|---|---|
| உக்ரத மிருத்யுவிற்கு | – 1 கலசம் |
| வருடங்களுக்கு | – 60 கலசங்கள் |
| மாதங்களுக்கு | – 12 கலசங்கள் |
| நக்ஷத்திரங்களுக்கு | – 1 கலசம் |
| வாரத்திற்கு | – 1 கலசம் |
| திதிக்கு | – 1 கலசம் |
| யோகத்திற்கு | – 1 கலசம் |
| கரணத்திற்கு | – 1 கலசம் |
| ரிஷிகளுக்கு | – 1 கலசம் |
| வசுருத்திரருக்கு | – 1 கலசம் |
| ஆதித்யர்களுக்கு | – 1 கலசம் |
| நவக்கிரகத்திற்கு | – 1 கலசம் |
| திக்பாலருக்கு | – 1 கலசம் |
| பிரம்மா, விஷ்ணு, ருத்ரா, விக்னேஸ்வரர் | – 4 கலசங்கள் |
| க்ஷேத்திரபாலர், அபயங்கரர், வாஸ்த்து | – 3 கலசங்கள் |
| மிருத்யுஞ்ஜயர், ஆகாசம், பூமி | – 3 கலசங்கள் |
| மொத்தம் | 94 கலசங்கள் |

ஷஷ்டியப்த பூர்த்தியில் ஹோமங்கள், அபிஷேகம் நிறைவு பெற்றதும் தச்தானம், பஞ்சதானம், ஏகவிம்சதி தானம் இஷ்டதானங்களைச் செய்ய வேண்டும்.

இவற்றுடன் உப்பு, பருப்பு, உளுந்து போன்ற தானியங்களையும் எண்ணிக்கை அடிப்படையில் 60, 30, 21, 11, 9 என வசதிக்கேற்பத் தானம் செய்யவேண்டும்.

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவம் நிறைவு பெற்றதும் தம்பதிகள் பிள்ளைகளுடன் அரசமரத்தைச் சுற்றி வலம்வரும் அஸ்வத்த பிரதக்ஷணமும் கூறப்பட்டுள்ளது.

மேலும், சதாபிஷேகம் கண்ட தம்பதிகளை அழைத்து நமஸ்காரம் செய்து உபசாரம் கொடுத்து அவர்களிடம் ஆசி பெறுவது மிகவும் சி றப்பானது.

சதாபிஷேகம் கண்ட தம்பதிகள் கிடைக்காவிடில் ஷஷ்டியப்த பூர்த்தி கண்ட தம்பதிகளை அழைத்து ஆசிபெறவேண்டும்.

வசதியுண்டாயின் 11, 9, 3 தம்பதிகளை அழைத்து தம்பதி பூஜை செய்யலாம். இவ்வாறு தம்பதிகளின் பூஜைகளில் கலந்து கொள்ளச் செய்யும் தம்பதிகள் குழந்தைகளைப் பெற்று பேரப்பிள்ளைகளைக் கண்டவர்களாக இருக்க வேண்டியது அவசியம்.

குழந்தை இல்லாத தம்பதிகளை, மங்கள வைபவங்களில் தம்பதிகள் பூஜையில் தவிர்க்க வேண்டும் என்பது சாஸ்த்திர விதியாகும்.

எனவே ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவம் காணும் தம்பதிகள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் இறைவனுடைய பரிபூரணமான திருவருளும், இலங்கை இந்து மத குருபீடாதிபதி அவர்களின் குருவருளும், நிறைபப்பெற்று தம்பதிகள் சதாபிஷேக வைபவத்தைக் காணும் பாக்யத்தைப் பிள்ளைகள் பெற வேண்டும் என எல்லாம் வல்ல கலியுக தெய்வமான சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமியின் திருவடிகளைப் பிரார்த்திக்கிறோம்.

*சர்வே ஜனா: ஸுகினோ பவந்து"*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் நாமங்களும் அருள் பாலிக்கும் பதிகளும்

## கண்ணகை அம்மன்

அக்கரைப்பற்று, அச்செழு, அமிர்தகழி, அல்வாய், ஆரையம்பதி, ஆனைக்கோட்டை, ஊரெழு, எருவில், எழுதுமட்டுவாழ், ஓமந்தை, கச்சாய், கன்னன்குடா, கரைச்சி, கல்முனை, சத்துருக் கொண்டான், கற்குடா, காரைதீவு, குடத்தனை, கொக்கட்டிச்சோலை, கோப்பாய், கோணவளை, செட்டிபாளையம், தம்பன்கடவை, தம்பிலுவில், நாகர்கோவில், நாவற்குழி, பளை, பன்றித்தலைச்சி, புங்குடுதீவு, புதுக்குடியிருப்பு. போரதீவு, மகிழடித்தீவு, மந்திகை, மண்டுவில், மண்டைதீவு, மயிலிட்டி, மாதனை, மிருசுவில், முகத்துவாரம், முல்லைத்தீவு, முகமாலை, முனைக்காடு, வந்தாறுமூலை, வண்ணை, வற்றாப்பழை, வாழைச்சேனை, வீமன்காமம், வீரமுனை.

## முத்துமாரி அம்பாள்

அச்சுவேலி, அல்வாய், அளவெட்டி, அமிர்தகழி, அனலைதீவு, இருபாலை, உடப்பு, உடையார்கட்டு, கசாத்துறை, கட்டுவன், கதிரவெளி, காரைநகர், காங்கேசன்துறை, கிளிவெட்டி, கீரிமலை, குஞ்சுக்குளம், குரும்பசிட்டி, கொத்துக்குளம், கொழும்புத்துறை, கோட்டைக்கல்லாறு, சமயபுரம், சுட்டிபுரம், சாம்பல்தீவு, சித்தாண்டி, சூராவத்தை, தும்பளை, தொல்புரம், நாவலப்பிட்டி, நாவற்குடா, நானாட்டான், நெடுந்தீவு, திருநெல்வேலி, பருத்திச்சேனை, பளை, பாகற்காய் குளம், புங்குடுதீவு, புதுக்குடியிருப்பு, புவாக்பிட்டி, மந்துவில், மயிலிட்டி, மண்டைதீவு, மாத்தளை, முகத்துவாரம், முல்லைத்தீவு, வட்டுக்கோட்டை, வண்ணை, வல்லை, வஹரக்கா, வாழைச்சேனை, வேதாரணி, வேலணை, கோப்பாய், கொட்டாஞ்சேனை, கம்பளை.

## பத்திரகாளி

மயூரபதி, அச்சுவேலி, இருபாலை, திருநெல்வேலி, திருமலை, தும்பளை, கல்முனை, சுழிபுரம், சங்கரத்தை, மட்டக்களப்பு, வண்ணார்பண்ணை, இணுவில்.

| | | |
|---|---|---|
| அபிராமி அம்மன் | – | பிராண்டா பதி |
| அதிகை நாயகி | – | வீரட்டானம் |
| அல்லியம் பூங்கோதை | – | திருவாரூர் |
| ஆதிமுத்துமாரி | – | புளியங்குளம் |
| இராஜராஜேஸ்வரி | – | அனலைதீவு, குருக்கடி, பலாலி, சிறுப்பிட்டி, தெல்லிப்பழை, நாயன்மார்கட்டு, புங்குடுதீவு, மந்துவில், மாவிட்டபுரம். |
| ஒப்பிலா நாயகி | – | நெடுங்குளம் |
| ஒப்பிலா முலையம்மை | – | ஆவடுதுறை |
| கடனாட்சி | – | மட்டக்களப்பு |
| கருமாரி | – | நீர்கொழும்பு, திருவேற்காடு |
| கருந்தார்க்குழலி | – | திருப்புகலூர் |
| கனகாம்பிகை | – | இரணைமடு |
| காமாட்சி | – | கச்சியேகம்பம், நீர்வேலி, வண்ணை. |
| காளிகா பரமேஸ்வரி | – | புங்குடுதீவு |
| காளிகாதேவி | – | களபூமி, கன்னாதிட்டி, புங்கை, மல்லாகம். |
| காளியம்மாள் | – | கொக்குவில், சங்கானை, மாதனை, மானிப்பாய், வண்ணை |
| கௌரியம்மை | – | திருக்கேதீச்சரம் |
| சண்டிகா பரமேஸ்வரி | – | பருத்தித்துறை |
| சல்லியம்மை | – | சாம்பல்தீவு |
| சிங்காபுரியம்மை | – | மட்டக்களப்பு |
| சிவகாமியம்மன் | – | இணுவில், கோண்டாவில், சிதம்பரம், திருமலை. |
| சிவகாமசுந்தரி | – | திருநெல்வேலி |
| சிவசக்தி | – | அச்சுவேலி |
| சிவமுத்துமாரி | – | பழுகாமம் |
| சீதளாம்பிகை | – | வவுனிக்குளம் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்ணாம்பிகை – சுன்னாகம்
சொக்கநாயகி – திருப்புன்கூர்
திருநிலைநாயகி – பிரமபுரம்
திரௌபதை அம்பாள் – பழுகாமம், பாண்டிருப்பு, மட்டக்குளி, உடப்பு
துர்க்காதேவி – அளவெட்டி, புதுக்குடியிருப்பு திருமலை, தெல்லிப்பழை, நுணாவில், வன்கூவர்
தேவரையாளி அம்பாள் – அல்வாய், ஏழாலை
நகுலாம்பிகை – நகுலேஸ்வரம்
நாகம்மை – கற்சிலைமடு, சீரணி
நாகபூஷணி – அராலி, ஏழாலை, காரைநகர், கோண்டாவில், சரவணை, நயினாதீவு, பரந்தன், புங்கன்குளம்
நாச்சியம்மன் – கிளான், நவாலி
பத்தினித்தெய்யோ – கதிர்காமம்
பத்தினியம்மை – ஈரளக்குளம், களுவன் கேணி, சம்புக்கழி, திருமலை.
பண்மொழியம்மை – பாண்டிக்கொடுமுடி
பராசக்தி – பூநகரி
பருவதவர்த்தனி – ஆவரங்கால், இராமேச்சரம், உரும்பிராய், ஊரெழு, புலோலி
பாலசுந்தரி – பாச்சிலாச்சிராமம்
பார்வதியம்மை – திருக்கயிலாயம்
புவனேசுவரி – அச்சுவேலி, இடைக்காடு, கிளிவெட்டி, கீரிமலை, சுதுமலை, மணற்காடு, நாவற்குழி
பெண்ணினல்லாள் – கழுக்குன்றம்
மகாமாரியம்மா – புளியங்கூடல், தொல்புரம், மட்டக்களப்பு, வரிசைப்புலம்
மகாமுத்துமாரி – கொழும்புத்துறை, வழக்கம்பரை
மாதுமையம்மாள் – திருகோணமலை
மகாகாளி – ஹல்ஸ்டோப் (கொழும்பு)
மனோன்மணி – நந்தாவில், நல்லூர், நாரந்தனை
மிந்திரன் அம்பாள் – துன்னாலை
மீனாட்சி அம்மை – அளவெட்டி, உடுவில், ஊரைதீவு, சங்கத்தானை, சரவணை, புங்குடுதீவு, திருவாலவாய்.
முதலியம்மன் – புலோலி
வடிவாம்பிகை – முன்னேஸ்வரம்
வாலாம்பிகை – வண்ணார்பண்ணை, வல்வை
வாலையம்மை – திருநெல்வேலி
வராவரி அம்பாள் – கொக்குவில்
விசாலாட்சி – காசியம்பதி, திருமலை
வீரபராசக்தி – வண்ணார் பண்ணை
வீரமாகாளி – இணுவில், கெருடாவில், சரசாலை, புங்குடுதீவு, வண்ணார்பண்ணை, கொழும்பு
வெண்ணீற்றுமையம்மை – நல்லூர்ப்பெருமணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கம்பளை மாநகர்

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

# மஹா கும்பாபிஷேகம்

## 03.06.2001

கம்பளை மாநகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான நவகுண்ட பக்ஷ அஷ்டபந்தன புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் கடந்த 03.06. 2001 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி 'சிவாகம கலாநிதி' ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சர்வதேச இந்துமத குருபீட வித்வத் சபைத் தலைவர் பிரதிஷ்டா சிரோமணி நவாலியூர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள், சர்வதேச இந்துமத குருபீட தென்னிந்திய அமைப்பாளர் சர்வசாதக திலகம், தாம்பரம் சிவஸ்ரீ தே. சு. முத்துக்குமாரஸ்வாமி சிவாச்சாரியார் ஆகியோர் சர்வபோதகாசார்யர்களாகவும்,

'சாதகபூஷணம்' கண்டி சிவஸ்ரீ ஜோதி – பத்மநாதக் குருக்கள், 'சர்வசாதக ரத்னா' தாம்பரம் சிவஸ்ரீ தே. சு. முத்து ஷண்முக சிவாச்சாரியார் ஆகியோர் சர்வசாதகாசார்யர்களாகவும் கலந்து கும்பாபிஷேகத்தைச் சிறப்பித்தனர்.

*இலங்கை இந்துமத குருபீடாதிபதி - சிவாகம ஞானி* அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் *பத்ததிக் கிரமப்படி குருவருளாசியுடன் மஹா கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெற்றன.*

**கும்பாபிஷேக கிரியா சம்ரக்ஷகர்கள் :-**

*பிரதிஷ்டா கிரியா ரெத்னம்* சிவஸ்ரீ.சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்
*( பிரதம குரு ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தானம் – சங்கானை).*

" மறைவண்ணர் " சிவஸ்ரீ. து. மணிவண்ண சிவாச்சாரியார்
*(பிரதம குரு ஸ்ரீராஜமாரி அம்மன் தேவஸ்தானம் – மலேசியா).*

*" சிவாச்சார்ய குலபூஷணம் "* சிவஸ்ரீ. சாம்பசிவ செந்தில்நாதக் குருக்கள்,
*(ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் – கொழும்பு – 13).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாசி வழங்கிய நவரெத்ன குருமணிகள் :

*"சிவாகம பூஷணம்"* பிரம்மஸ்ரீ. பா. ஷண்முகரெட்ண சர்மா. *(மருதானை).*

*'வேதாகம சிரோமணி'* சிவஸ்ரீ. சதா. சுப்பிரமணியப்பட்டர் *(ராமகானசபை).*

*"பிரதிஷ்டா கலாநிதி"* சிவஸ்ரீ. நா. சோமாஸ்கந்த சிவாச்சாரியார் *(அவுஸ்திரேலியா).*

*'மஹாராஜஸ்ரீ.'* து. ஷண்முகநாதக் குருக்கள் *(மாவை ஆதீனம்).*

*"பிரதிஷ்டா பூஷணம்"* சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் *(நயினை).*

*'பிரதிஷ்டா கலாநிதி'* சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்கள் *(கொழும்பு).*

*'சகலாகம சங்கிரகர்'* சிவஸ்ரீ. நா. சர்வேஸ்வரக் குருக்கள் *(சுன்னாகம்).*

சுவாமிஜீ சாம்பசிவ ஸ்ரீ தணிகாசலேஸ்வர குருக்கள் *(தென்ஆபிரிக்கா).*

*"கிரியா கலாமணி"* சிவஸ்ரீ. கணபதி சாமி ராமச்சந்திரகுரு *(மலேசியா).*

**தேவஸ்தான பிரதமகுரு :** சிவஸ்ரீ.இ.சோமாஸ்கந்தக் குருக்கள் *(கம்பளை)*

குப்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார் :

*சர்வதேச இந்துமத குருபீடாதிபதி - இலங்கை பிராம்மண சமாஜத் தலைவர்,*
சிவாகம கிரியா கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார். **J. P.**
(தலைவர். இந்து சமய கலாச்சார - முத்தமிழ்ச் சங்கம் தலைவர் சர்வமத சமாதான சங்கம்).

*'சிவாகமதுரந்தரர்'* சிவஸ்ரீ.பா.ஜெகன்நாதக் குருக்கள் *(மஞ்சத்தடி – இணுவில்)*

*'கிரியாகலாபமணி'* சிவஸ்ரீ. R. பிறேமகாந்தக் குருக்கள் *(நோர்வூட்)*

*'குமரகுருமணி'* சிவஸ்ரீ. பால குகேஸ்வரக் குருக்கள் *(பண்டாரவளை)*

*சிவாச்சார்யமணி* சிவஸ்ரீ. சோ. பாலசந்திர குருக்கள் *(குளியாப்பிட்டி)*

சிவஸ்ரீ. கருணாகர ஷடாட்சரக் குருக்கள் *(கல்லடி, மட்டக்களப்பு)*

*"பிரதிஷ்டாபூஷணம்'* சிவஸ்ரீ. வை. பாலசுந்தரக் குருக்கள் *(ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம், கொழும்பு)*

*'சிவாச்சார்யமணி'* சிவஸ்ரீ. முத்து. ஜெயந்திநாதக் குருக்கள் *(நந்தாவில்)*

*'சிவச்சார்யமணி'* சிவஸ்ரீ. சி. சண்முகரெட்ணக் குருக்கள், *(அல்விஸ் பிளேஸ், கொழும்பு)*

பிரம்மஸ்ரீ அமிர்தலிங்க சர்மா - ஷடாட்சர ஸ்ரீ சரவணபவ சர்மா.

*சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீட இளவரசன்* சாம்பசிவ ஸ்ரீ மணிகண்ட சர்மா *(கொழும்பு)*

*'சிவாச்சார்யமணி'* சிவஸ்ரீ. க. சிவபாலக் குருக்கள், *(ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் – செக்கடித்தெரு)*

சிவஸ்ரீ . ச. ஜோதிஸ்காமக் குருக்கள்

*'கிரியாகலாபமணி'* சிவஸ்ரீ. சாம்பசிவ. அகிலாண்டேஸ்வர குருக்கள் *(மலேசியா)*

பிரம்மஸ்ரீ. ப. பரமேஸ்வர சர்மா *(கம்பளை)*

பிரம்மஸ்ரீ. சி. பாலசுப்பிரமணிய சர்மா *(கொழும்பு)*

பிரம்மஸ்ரீ. க. சிவராஜ சர்மா *(சுதுமலை)*

பிரம்மஸ்ரீ. எஸ். ஜெனார்தன சர்மா – பிரம்மஸ்ரீ. ச. ரட்ணதாஸ சர்மா *(வத்தளை)*

பிரம்மஸ்ரீ மா. சதீஸ்வரசர்மா *(கொழும்பு)*.


ஆகியோர் கும்பாபிஷேகக் கிரியைகளில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

*கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


# ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம்

## அடிஸ்வில் - சுவிஸ்ஸர்லாண்ட்

## (ADLISWIL - SWITZERLAND)

# சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமி

# மஹா கும்பாபிஷேக விழா

*லோகவீரம் மஹாபூஜ்யம்! சர்வ ரக்ஷாகரம்விபும்!*

*பார்வதீ ஹ்ருதயா நந்தம்! சாஸ்தாரம் ப்ரணமாம்யகம்!!*

**மெய்யடியார்களே!**

சுவிஸ் - அடிஸ்வில் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமிக்கு நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனி மாதம் 13ம் திகதி (27.06.2001) புதன்கிழமையும், ஸப்தமி திதியும் உத்திர நக்ஷத்திரமும் கூடிய காலை 11.00 மணி 52 நிமிடம் முதல் 12.00 மணி 30 நிமிடம் வரையுள்ளள சிங்க லக்ன சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து சுவாமி ஐயப்ப சுவாமியின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கிரியா கால விபரங்கள் வருமாறு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரியா கால விபரம்

*1ம் நாள் ஆனி மாதம் 11ம் நாள்*
*(25.06.2001) திங்கட்கிழமை*

காலை 9. 00 மணிமுதல் கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, புண்ணியாவாசனம், அனுக்ஞை, மஹா கணபதி ஹோமம்.

மாலை 6.00 மணிமுதல் புண்ணியாக வாசனம், மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடகஸ்தாபனம், யாகாரம்பம், யாகபூஜை, ஹோமம், தீபாரதனை, வேத-ஸ்தோத்திர பாராயணம்.

*2ம் நாள் ஆனி மாதம் 12ம் நாள்*
*(26.06.2001) செவ்வாய்க்கிழமை*

காலை 9.00 மணிமுதல் புண்ணியா வாசனம், ஆசார்ய விசேஷ சந்தி, பூதசுத்தி, யாகபூஜை, ஹோமம்.

பகல் 11.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை அடியார்கள் நெய்க்காப்பு சாத்துதல் (நெய் அபிஷேகம்)

மாலை 5.30 மணிமுதல் புண்ணியாக வாசனம், பிம்பசுத்தி, நியாசம், விஷேடதிரவ்ய ஹோமம், தீபாராதனை.

*3ம் நாள் ஆனி மாதம் 13ம் நாள்*
*(27.06.2001) புதன்கிழமை*

காலை 8. 00 மணிமுதல் புண்ணியாவாசனம், யாக பூஜை, ஹோமம், உபசார ஹோமம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, யாத்ராதானம், வேத-ஸ்தோத்திர பாராயணம், திருமுறை பாராயணம், ஆசீர்வாதம்.

மாலை 5.30 மணிக்கு கும்ப உத்தாபனம், வீதிப்பிரதாக்ஷணம், புஷ்பாஞ்சலி, நண்பகல் 12.00 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

மாலை 6.00 மணிக்கு மஹா அபிஷேகம் நடைபெறும்.

**ஆலய பிரதம குரு**

'குகபூஜா துரந்தரர் - வேதாகம கலாபமணி'

***சிவஸ்ரீ. T. சரஹணபவானந்தக் குருக்கள் அவர்கள்***

**கும்பாபிஷேகப் பிரதமகுரு**

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி", "சிவாகம கிரியா கலாநிதி"

**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J. P. அவர்கள்**

*(அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி)*

*ஆகியோர் தலைமையில் மஹா கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறவுள்ளன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆன்மீகப் பெருவிழாவில்
“சர்வதேச இந்துமத குருபீடாதிபதி”
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ
சிவாச்சாரியார்
தலைமையுரை ஆற்றுகிறார்.





கொழும்பு 11, ஸ்ரீ சம்மாங்கோட்டார்
ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய
பிரதம குரு ‘சமஸ்கிருத பண்டிதர்’
சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக் குருக்கள்
வேதபாராயணம் நிகழ்த்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆன்மீகப் பெரு விழாவில்
முகத்துவாரம் சர்வார்த்த விநாயகர்
ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாக்ஷர
பாலசுப்பிரமணியக் குருக்கள்
ஸ்தோத்திர பாராயணம்
நிகழ்த்துகிறார்.



ஆன்மீகப் பெருவிழாவில்
மயூரபதி அம்பாள் தேவஸ்தான
தர்மகர்த்தா 'சிவநெறிச் செல்வர்'
பொன். வல்லிபுரம், ஜே. பி.
உரையாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் கொழும்பு மாநகர மேயர் கௌரவ கே. கணேசலிங்கம், J. P. U. M. அவர்களுக்கு திரு. தி. பாலகுமார் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கிறார்.

சர்வதேச இந்துமத குருபீடம் நடாத்திய ஆன்மீகப் பெருவிழாவில் துர்க்கா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ விஸ்வ நாராயண சர்மா அவர்கள் உரையாற்றுகிறார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆன்மீகப் பெருவிழாவில் முத்தமிழ்ச் சங்க ஆலோசகர் 'வாகீஸ கலாநிதி' ஜெ. திவ்வியநாதன் (EX M. P. ) சிறப்புரை ஆற்றுகிறார்.




சர்வதேச இந்துமத குருபீடம் நடாத்திய ஆன்மீகப் பெருவிழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய தர்மகர்த்தா கௌரவ டி. எம். சுவாமிநாதன் அவர்களுக்கு திரு. எஸ். பத்மநாதன் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச இந்துமத குருபீடத்தின் மூலம் 350 வசதிகுறைந்த (தாய்-தந்தை அற்ற மாணவர்கள்) வசதிகுறைந்த மாணவர்களுக்கு மாதாந்தம் வங்கியில் பணம் சேமித்து வழங்கும் நிகழ்வில்சர்வதேச இந்துமத குருபீடாதிபதி மாணவி ஒருவருக்கு வங்கிக் கணக்குப் புத்தகம் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமி மகர ஜோதி விழாவில் பீடாதிபதி ஆன்மீக உரையாற்றுவதையும் கலந்து கொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமி மகரஜோதி விழாவில்
மலையாள பூஜை நடைபெறும் காட்சிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org